

இதழ்-04
01.07.2020
மயானம் நான்
சிங்ககிரித்தலைவன்
கோடீஸ்வரனின் வழக்கு
பெருவெள்ளத்திற்கான பயணம்

# ஒலி பெருக்கிகளை ஒளித்து வையுங்கள்




பல ஆலய மகோற்சவங்களும், திருவிழாக்களும் ஆரம்பமாகி உள்ளன; ஆரம்பமாக உள்ளன. சில ஆலயங்கள் பிற்போட்டதாக அறிவித்து, தற்போது ஆலயத்திருவிழாக்களை ஆரம்பித்து உள்ளன. மேலும் பல விழாக்கள், கூட்டங்கள் என ஒலிபெருக்கிப்பாவனைகள் அதிகரித்து வருகின்றன.

ஆலயமாயினும், தேவாலயமாயினும், பள்ளிவாசலாயினும், விகாரைகளாயினும் அல்லது வேறு விழாக்கள் எதுவாயினும் ஒலி பெருக்கிகளை ஒலிக்க விடுவது எமது மரபாகிவிட்டது. ஆனால் தற்போது குறுகிய தயார்படுத்தலுடன் எமது மாணவர்கள் உயர்தர பரீட்சைக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அத்தோடு உலகின் பல நாடுகள் அவல நிலையில் இருக்கின்றன. மேலும் மக்களை அழைக்கும் உத்திதான் ஒலிபெருக்கி எனும் போது, மக்கள் ஒன்று கூடுவதே தவிர்க்கப்பட வேண்டிய சூழலில் ஏன் மக்களை அழைக்கிறீர்கள்? ஒலி பெருக்கிகளை ஒழித்து விடுங்கள் என்று சொல்லவில்லை. சற்றே ஒளித்தாவது வையுங்கள் என்றுதான் கேட்கிறோம்.

இந்த கொரோனாக்காலம் இதுவரை நடந்த உலக வழக்கையே மாற்றி இருக்கிறது. மூடப்படாத அலுவலகங்கள் தொடக்கம் மதத்தலங்கள் வரை மூடச்செய்திருக்கிறது. பலதரப்பட்டவர்களின் முயற்சியால் தெய்வாதீனமாக எமது நாட்டில் கொரோனா கட்டுப்பாட்டில் உள்ளது. அதற்கு நன்றி செலுத்தும் முகமாகவும், உலக சுபீட்சத்திற்காகவும், எமது பிள்ளைகளின் வழமான எதிர்காலத்திற்காகவும் அமைதியான முறையில் பிரார்த்திப்பதே ஒரே வழி.

'உள்ளம் பெருங்கோயில்
ஊனுடம்பு ஆலயம்'

# அட்டைப்படம் பற்றி...

**ஒளிப்படம் : ஜெயநாயகம் ஜெயதீஸ்**

முன்னணியில் உள்ள அணில் நிகழ்காலத்தையும், பின்னணியில் உள்ள அணில் இறந்த காலத்தையும் குறிப்பதாய் உள்ளது. கண்ணாடிகள் நிரம்பிய மதில் மேல்த்தான் பயணிக்க வேண்டும் என்பது அணிலுக்கு கட்டாயமல்ல. ஆனால் பயணிக்க முயற்சித்து, பாதி வெற்றியில் நிற்கிறது அந்த நிகழ்கால அணில். அந்த வெற்றிக்களிப்பில் அது தன் மீதிப் பயணத்தை அவசரப்பட்டு தொடரவில்லை. நிதானமாக, சிந்தித்தே தொடர்வதை காட்டும் இந்த புகைப்படம் எமக்கு சொல்லும் பாடங்கள் ஏராளம்.

இலக்கை உடைய பாதைகள் பலவிதம். தெரிவுகள் எமதாகிறது. அதன் பலன்களும் எமதாகிறது. எதுவானாலும், இறந்தகாலத்தை மறவாது, எதிர்கால திட்டமிடலோடு, அவசரப்படாத நிதானமான நிகழ்காலமே வெல்கிறது.

இவ்விதழில்

# தூமித்துளை.

04 சித்திராங்கதா

06 கொரோனா நினைவுகள்

07 கோடீஸ்வரனின் வழக்கு

09 யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் பயிர்ச்செய்கை

11 மன உளைச்சல்

13 இலங்கையில் நடக்கின்ற யுத்தம் நிறுத்து

16 மயானம் நான்

18 பங்குச்சந்தை பயமா? பயனா?

20 என் இதயம் எழுதும் சொல்

22 சுடாநாட்டின் சுற்றுலாத்துறை அபிவிருத்தி

24 சங்க கால திருமணங்கள்

26 சிங்ககிரித்தலைவன்

29 மாற்றத்தை காண்போம் வாழ்வில்

31 யாருக்கு தேசவழமை

34 தாம்பூலம் தரித்தல்

35 கொரோனா கால கல்விநிலை

37 குறுக்கெழுத்துப்போட்டி

38 யுவராஜ் எனும் யுகவீரன்

தூமி பல்கலை மின்னிதழ்
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06



# சித்திராங்கதா

காவ்யமோகன்

## ஆடல் 04

நம் போராட்டம் ஒரு தொடர்கதை. அது பல காலங்களுக்கு முன்னே தொடங்கப்பட்டுவிட்டது. போராடுவது எல்லோரினதும் உரிமை. ஆனால் நாம் உரிமைக்காகவே போராடுகிறோம். நாம் வெற்றியை நோக்கி போராடினோம். ஆனால் போராடுவதே வெற்றி என்பதை காலம் உணர்த்தியது.

வர்த்தகவாசல் வழியாக இலங்கைக்குள் நுழைந்து கோட்டை இராச்சியத்தை கவர்ந்து யாழ்ப்பாண இராச்சியத்தை சரித்துவிட போர்த்துக்கேயர் குறி வைத்து காத்திருந்த காலத்திலும் நாம் விடாது போராடிக்கொண்டிருந்தோம். அது சாதாரண போராட்டம் அல்ல. முதலாம் சங்கிலிய மகாராஜா காலத்தில் நிகழ்ந்த யுத்தங்கள் கொடூரமானவை. சளைக்காத வீரனான சங்கிலியனை சரிக்க நினைத்த போர்த்துக்கேயர் எண்ணம் தொடர் தோல்வியை சந்தித்துக்கொண்டிருந்தது.

ஆண்டுகள் எத்தனை கடந்தாலும் போர்த்துக்கேயன் குறி திசை மாறவில்லை. சங்கிலியன் மறைவுக்குப்பின் தம் அதிகாரத்திற்குள் அடங்கும் ஆட்சியாளனை அரியணை ஏற்றி காய் நகர்த்தினர். அன்னை பூமியில் அந்நியனுக்கு அஞ்சி நடப்பது எத்தனை நாட்களுக்குத்தான்? எங்கோ ஒரு வீரன் இதனை பொறுத்துக்கொள்ளாமல் கிளர்ந்தெழுவான். சங்கிலிய குமாரன் அவ்வாறு வெளிப்பட்டான். போர்த்துக்கேயரின் பொம்மை அதிகாரத்திடமிருந்து ஆட்சியை கைப்பற்றி இரண்டாம் சங்கிலியனாய் அரியணை ஏறினான். பறங்கிக்கூட்டத்தை அடியோடு பெயர்த்தனுப்ப தீவிரமானான்.

தஞ்சையிலிருந்து வருணகுலத்தான் தலைமையில் வந்த உதவிப்படை சங்கிலிய குமாரனை சந்திக்க நல்லூர்க்கோட்டை நோக்கி விரைந்துகொண்டிருக்கிறது.

யாழ்ப்பாண வீதிகள் வீரர்களின் ஊர்வலத்தால் பிரகாசமடைந்திருந்தன. அது யாழ்ப்பாண மக்களின் மனங்களில் தேங்கியிருந்த அச்சத்தை ஊடுருவி துளைத்து புதுத்தெம்பளித்துக் கொண்டிருந்தது.

'யார் இவர்கள்? எம்மைப் போன்றவர்கள் ~ யாருக்காக வந்திருக்கிறார்கள்? எமக்காக வந்திருக்கிறார்கள் ~ எதற்காக வந்திருக்கிறார்கள்? நம் இராச்சியத்தை நிலைநிறுத்த தூணாய் வந்திருக்கிறார்கள் ~
எம் உரிமைகளை மீட்டுத்தர உதவிக்கரம் நீட்டி வந்திருக்கிறார்கள் ~ எம்மை வாழவைக்க வந்திருக்கிறார்கள்' என மனங்களில் உதித்த எண்ண அலைகளால் யாழ்ப்பாண மக்களின் கண்களில் தஞ்சை வீரர்கள் பெருமதிப்போடு பார்க்கப்பட்டனர்.

ஆயினும் எதிர்பாராத சங்கடமாய் அந்தசம்பவம் நடந்துவிட்டது. வருணகுலத்தானை குறி வைத்து காத்திருந்த ஈட்டி கண்ணிமைக்கும் நேரத்தில் கூட்டத்திலிருந்து வெளிப்பட்டது.

காற்றைக் கிழித்து பாய்ந்து வந்த ஈட்டி வருணகுலத்தானை நெருங்கும் முன் சேனாதிபதி மகிழாந்தகன் கைகளில் சிறைப்பட்டது. ஈட்டியைத் தாவிப்பிடித்த பின் சேனாதிபதி ரதத்தை விட்டு ஆவேசமாய் இறங்கினான்.

கோசங்கள் அடங்கி திடீரென நிலவிய அமைதியினை கலைத்தபடி அங்கு குழுமி நின்ற மக்கள் சிலர் யாரோ ஒருவனை பிடித்து இழுத்து வந்து சேனாதிபதி முன் நிறுத்தினர்.
'ஈட்டியை பாய்ச்சிய துரோகி இவனே ~ இவன் பெயர் காத்தவராயன். இவன் தலையை கொய்து தஞ்சைத்தளபதிக்கு காணிக்கையாக்க வேண்டும்' என கூட்டத்தில் ஒருவன் உரத்துக் கூறினான். அதை ஆமோதிக்கும் வண்ணம் மக்களும் வீரர்களும் பொங்கி எழுந்தனர்.

சுற்றி நின்ற வீரர்கள் கையில் வாளினை உருவியபடி சேனாதிபதியின் கட்டளைக்காக காத்து நின்றனர்.

கூட்டத்தினர் இழுத்து வந்த வயது முதிர்ந்து போன தோற்றங்கொண்ட காத்தவராயனைக் கண்டு மகிழாந்தகன் கோபம் பொங்கிச் சிவந்தான். அவன் உடலை கூறுகளாக துண்டு போட்டாக வேண்டும் என எண்ணம் தோன்றியது.

ஆயினும் அந்தக் காத்தவராயனின் முகம் எந்த உணர்ச்சியையும் காட்டாது அமைதியாக இருந்தது. அத்தோடு அந்த முகம் எங்கோ பார்த்தது போல் மகிழாந்தகன் சிந்தனையை உருத்தியது. அதனால் சிலநொடியில் நிதானமானான். அவசரப்பட்டு எதையும் செய்துவிட கூடாது என கணநேரத்தில் தீர்மானித்தான்.

'இவன் ஆற்றியது சாதாரண காரியமல்ல. இதற்கு தண்டனை ~ கேவலம், இவன் உயிர் பறிப்பது போதாது. கட்டி இழுத்துவாருங்கள் இந்தப்பாதகனை ~ தக்க தண்டனை அரசவையில் அறிவிக்கப்படும்.'


என வீரர்களை நோக்கி ஆணையிட்டான். அருகில் நின்ற வீரர்கள் ஈட்டி முனையில் காத்தவராயனை சிறைபிடித்தனர். மகிழாந்தகன் வருணகுலத்தான் பக்கம் திரும்பினான்.

நடந்த சம்பவங்களினால் எந்தவித பதற்றமும் அடையாமல் யானை மீது அமர்ந்த படி நடப்பவற்றை பொறுமையாக பார்த்துக் கொண்டிருந்தான் வருணகுலத்தான். யாழ்ப்பாண மக்கள் அந்தக்காத்தவராயன் மீது காட்டிய கோபத்தைக் கண்டு அம்மக்கள் தன்மீது கொண்ட நம்பிக்கையை எண்ணி அவன் பெருமிதமடைந்தான்.

மகிழாந்தகன் வருணகுலத்தான் அருகில் வந்து 'நடந்த இந்த சங்கடத்திற்காய் நான் எவ்வாறு மன்னிப்பு கோருவது என்று கூட அறியேன். தாங்கள் பெருமனது கொண்டு பொறுத்தருள வேண்டுகிறேன்' என்றான்.

'தாம் செய்த உபகாரத்திற்கு நானல்லவா நன்றி கூற வேண்டும். தாங்கள் என் உயிரை கணநேரத்தில் காத்திருக்கிறீர்கள்' என்று புன்னகை மாறாமல் வருணகுலத்தான் கூறினான்.

'ஆகா ~ தங்கள் உயிரை நான் காத்தேன் என்பது எவ்வளவு பெரிய வேடிக்கை. நான் என் கடைமையை புரிய சிறிய வாய்ப்பு பெற்றேன்.




இல்லாது போயினும் தங்கள் உயிரைப்பறிக்கும் வலிமை அந்த வயோதிபனின் சிறு ஈட்டிக்கு கிடையாது' என்றான் மகிழாந்தகன்.

'பிறகு எதற்கு இச்செயல் குறித்து தாம் சங்கடம் கொள்ள வேண்டும். உண்மையில் நான் இப்போது தான் இந்தக களிறு மீது அமர்ந்திருப்பதனை பெருங்கர்வமாய் உணர்கிறேன். யாழ்ப்பாணமக்கள் என்மீது கொண்ட அன்பை குறித்து தாங்கள் முன்னர் உரைத்த போது கூட நான் நம்பவில்லை. இப்போது முழுமையாய் உணர்கிறேன். என் பாக்கியத்தை எண்ணி பேரானந்தம் கொள்கிறேன். வீண் வருத்தம் வேண்டாம் சேனாதிபதியாரே' என்று பெருமிதமாய் உரைத்தான் வருணகுலத்தான்.

'தங்கள் மனத்தின் விலாசம் என்னை நெகிழ வைக்கிறது. ஆயினும் அந்த முதியவனுக்கு தக்க தண்டனை வழங்கப்பட வேண்டும். இது அந்த மிக்கபிள்ளை ஆராச்சியின் திட்டமாக தான் இருக்க வேண்டும். பறங்கியனோடு சேர்ந்து சதி செய்து ஆட்சியை பிடிக்க முயல்கிறான். உள்ளூர்க்குடிகளை கூட்டியே கலவரங்கள் நிகழ்த்துகிறான். அந்தத் துரோகியை அரசர் பலமுறை மன்னித்திருக்கிறார். ஆனால் இனியும் பொறுமை காக்ககூடாது. அவனுக்கு பெரிய முடிவு கட்டியாக வேண்டும். அதற்காகத்தான் இந்த முதியவனை நேரே அரசரிடம் அழைத்துச் செல்ல தீர்மானித்தேன்' என்றான் மகிழாந்தகன்.

'பறங்கியன் சூழ்ச்சிகளில் இதுவும் ஒருவகை தான். அரசுரிமை ஆசை காட்டி ஆட்சியை எதிர்த்து கிளர்ச்சி புரிய வைப்பது. இதற்காய் உள்ளூர் குடிகளை தண்டிப்பதிலும் பயனென்ன? இதற்கு ஒரு வழி பறங்கியனை அடியோடு நாட்டைவிட்டு ஓட வைப்பதுவே! அதற்கான காலமும் நெருங்கிவிட்டது' என மகிழாந்தகனை பார்த்து தீர்க்கமாய் கூறினான் வருணகுலத்தான்.

'உண்மைதான் வருணகுலத்தாரே~ அதற்கான தருணம் மிக அருகில் வந்துவிட்டது. அந்த அச்சத்தினாலே தங்கள் மீது ஈட்டிப்பாய்ச்சல் திட்டம் தீட்டியிருக்கிறார்கள். அவர்கள் திட்டம் எதுவும் இனி இங்கு சாத்தியப்படாது' என கர்வமாய் கூறியபடி ரதத்தில் ஏறினான் மகிழாந்தகன்.

ஊர்வலம் மீண்டும் புறப்பட்டது. அங்கே கோட்டை வாசல் வருணகுலத்தானை வரவேற்க காத்திருக்கிறது. அந்திப்பொழுதில் அரண்மனை கூடியிருக்கிறது.

*வரவேற்பு நிகழும்...*


# கொரோனா காலத்து நினைவுகள்

நான் சுயநலவாதி...
நீங்கள் சுயநலவாதியா?

சுயநலவாதி இல்லையென்றால் நீங்கள் பொது எதிரி!

இன்று ஊரடங்கு தளர்த்த முதலே மக்கள் நடமாட தொடங்கிவிட்டார்கள். பின் பொதுவாக எல்லா இடங்களிலுமே வழமையை விட கூட்டம் கூட்டமாக அடிபட்ட வண்ணமாகவேதான் இருந்திருந்ததை முகப்புத்தக பதிவுகளினூடாக அவதானிக்ககூடியதாக இருந்தது.

நாம் தற்போது போராடும் எதிரி கண்ணுக்கு தெரியாத 14 நாள் வரை கூட குணம்குறி ஏதும் காட்டாமல், யாருக்கு தொற்று இருக்கு, யாருக்கு இல்லை என்றும் வெளிப்படுத்தாமல் நோயை இலகுவாக பரப்பி உயிர் கொல்லி வரை செல்ல கூடியது.



இன்று கடைகளில் அலைந்தவர்களில் எத்தனை பேர் உண்மையாகவே வீட்டில் சமையலுக்கு பொருட்கள் இல்லாமல் வேண்டுவதற்காக போனவர்கள்? பெரும்பாலும் பதுக்கலுக்கு போனவர்களே அதிகம். இவர்கள் இப்படி போய் நோயை வாங்கி வந்து மேலும் பரப்பினால் மட்டுமே இந்த பதுக்கல் மேலும் அவசியம். இல்லாவிடின் ஒரு 14 நாட்களில் இதை குறைத்து விட வாய்ப்பு இருக்கலாம்.

இதை கதைக்கபோனால், ஒரு பெருந்தொகையான வாத பிரதிவாதங்கள் வரும். ஆனால் எம் உயிரின் பெறுமதியுடன் ஒப்பிடும்போது ஒரு 14 நாட்கள் முழுமையாக வீட்டிலிருந்து இந்த பிரச்சனைக்கு தீர்வு காண்பதன் மூலம் ஏற்படும் இழப்பு குறைவானதே.

தற்போது ஒரு 14 நாட்கள் முற்றுமுழுதாக மக்கள் நகர்வை முடக்கி, இனம் காணப்படும் நோயாளிகளுக்கு வைத்தியமளிக்க எம்மிடம் உள்ள வைத்தியசாலைகளில் ஆற்றல் இருக்குமாயின், மேலும் இதை பரவ அனுமதித்துவிட்டு, நோய் கட்டுக்கு அடங்குதில்லை என்று தீர்மானித்து மீண்டும் ஒரு 14 நாட்கள் மக்கள் நகர்வை தடுக்க முயன்றால், அந்த வேளையில் இருக்கும் நோயாளிகளை கையாளத்தக்க வசதி எமது வைத்திய சாலைகளுக்கு இருக்குமா என்பது சந்தேகமே.

எனவே பலமான எதிரியுடன் மோதுவதைவிட, அதை தவிர்ப்பதே புத்திசாலிதனம்.

1. தினக்கூலி வேலையால் என்ன செய்வான்?
2. தோட்டத்தில் விளைந்த மரக்கறியை என்ன செய்வது?
3. வறுமை நிலையில் உள்ளவன் என்ன செய்வான்?
4.......

இப்படி ஒரு தீவை முடக்கும் போது ஆயிரம் பிரச்சனை வந்தே தீரும். அனால் அவைகளை அதிகாரமுள்ளவர்கள் , அரச அதிகாரிகள் முயன்று தீர்த்து வைக்க முடியும். தொடர்ந்தும் திட்டமிட்டு படிப்படியாகவாவது தீர்த்து வைப்பார்கள். ஆனால் corona வால் தீவு நிர்க்கதியானால், எவராலுமே எம்மை காப்பாற்றமுடியாது போய்விடும்.

இன்று ஊரடங்கு நீக்கப்பட்ட வேளையில் சுயநலவாதியாகி வீட்டில் இருக்கவேண்டும். என்னையும் என்குடும்பத்தையும் காக்க வேண்டும் என்றும், தொற்று எனக்கு வந்து நான் இது பரவ காரணமாகி எனது சமூகத்துக்கு தீங்கு இளைக்க கூடாது என்றுமே வீட்டிலிருந்தேன்.

அவ்வாறு ஒருவர் இல்லாவிட்டால் அவர் “பொது எதிரி” தானே?
(அத்துடன் எனது வீட்டில் பதுக்கலும் இல்லை.)

எனவே எம் அன்பு உள்ளங்களே அடுத்த ஊரடங்கு நீக்கத்திலாவது எமது தேவையற்ற நடமாட்டத்தை குறைத்து, அவசியமான நகர்வுகளில் உரிய பாதுகாப்பு முறைகளை பின்பற்றி முக்கியமாக எமக்கிடையேயான சமூக தூரத்தினை பேணி எம்மையும் எமது நாட்டவரையும் காப்போம்.

இது யார் மனத்தையும் புண்படுத்துமுகமாக எழுதப்படவில்லை.

.

பே. அமலேந்திரன்
பிரதம பொறியியலாளர் (பரி.பரா)
வட மாகாணம்
இலங்கை மின்சார சபை
24.03.2020

கோபி பிரகாஷ் திருக்குமரநாதன்

# கோடீஸ்வரனின் வழக்கு






உயர்நீதி மன்றத்தில் முறையிடப்பட்டு விசாரிக்கப்பட்ட வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக இலங்கை அரசு பிரிட்டிஷ் அரசவைக்கு முறையீடு செய்தது. இலங்கை வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த ரணசிங்கவின் வழக்கினுடைய தீர்ப்பை 1964 பிரிட்டிஷ் அரசவை சார்பில் பியேர்சுப் பிரபு வழங்கத் தயாரானார். "பொறு பொறு! 1964 ரணசிங்க கதையா? கொஞ்சம் முன்னாடி போய்ட்டாய்". அட ஆமால கோடீஸ்வரனுக்கு தீர்ப்பு சொல்லுறனு வந்து ரணசிங்கடதுக்கு வந்துட்டன். அட வாங்க நாம 1964 ஏப்ரல் 24 கோடீஸ்வரன்ட தீர்ப்புக்கே போவம்.

அன்று வழக்கினுடைய தீர்ப்பினை வழங்க முன்வந்த நீதிபதி திரு.ஒ.எல்.டி.கிறெட்சர் கூறியதாவது. "1956ம் ஆண்டின் 33 வது சட்டமான ஆட்சிமொழிச்சட்டமானது அரசியலமைப்பின் 29ம் சரத்தின் 2ம் விதிக்கு முரணானமையால் அது ஒரு வலுவற்ற சட்டமாகும். எனவே இவ்வாறு வலுவற்ற சட்டத்தை முன்னிலைப்படுத்தி அமுல்படுத்த முயன்ற அரசசேவை விதிகளும் செல்லுபடியற்றது" அப்புறம் என்ன கோடீஸ்வரனுடயை முகத்தில் ஒரே புண்சிரிப்பும் அரசு சார்பில் எதிர்த்துவாதாடிய சட்டமா அதிபரின் முகத்தில் ஈயும் ஊசலாடியது. ஆம், "திரு.கோடீஸ்வரனுக்கு வழங்கப்பட வேண்டிய சம்பள உயர்வுகள் வழமைப் போல் வழங்கப்பட வேண்டும், வழக்கில் முன்வைத்த காரணம் அதற்கு எவ்வித தடையையும் ஏற்படுத்த முடியாது" என்று நீதிபதி தீர்ப்பளித்தார்.




அட என்னப்பா! இந்த தீர்ப்புக்குத்தான் தொடர்ச்சினு போட்டியா? அன்னைக்கே முடிச்சிருக்கலாமே? எண்ட உங்க மைண்ட் வாய்ஸ் புரியுது. கொஞ்சம் பொறுங்க! அங்க சீன் இன்னும் முடியல. "இலங்கைட ஆட்சி மொழிச்சட்டம் இனப்பாகுபாட்டுச் சட்டம் எனவே செல்லுபடியாகாது" என்று மாவட்ட நீதிமன்றம் தமிழ் மக்கள் சார்பாக வழங்கிய தீர்ப்பை பெரும்பான்மை சமூகம் அப்படியே கைகட்டி ஏத்துக்கிட்டா, அப்புறம் எப்படி சிங்களமயமாக்கல் என்ற கனவை இலங்கையில நனவாக்கிறது. உடனே உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்றாங்க.

மறுபக்கம்

தீர்ப்பு என்ன என்பதைத் தாண்டி இந்த வழக்கினூடாக நாம் உற்று நோக்க வேண்டிய விடயம் என்னவென்றால் இனங்களின் உரிமைகளானது அரசியலமைப்பின் 29ம் சரத்தின் 2ம் விதிகளுக்கு கீழே ஆணித்தரமாக அன்று பாதுகாக்கப்பட்டிருக்கின்றது என்பதுதான். ஆனால் பின் நாட்களில் நாட்டினுடைய இறையாண்மை என்கின்ற போர்வையில் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாத்த ஆணிவேர்களை பிடுங்கித் தான் அரசியலமைப்பானது யாக்கப்பட்டது என்பது நாம் அனைவரும் அறிந்ததுதான். சரி நாம் கொழும்பு உயர்நீதிமன்றதுத்துக்குள் உள்நுழைவோம்.



இந்த தடவை அரசாங்கம் தொடுத்த வழக்கில் சட்டமா அதிபருக்கு எதிராக கோடீஸ்வரன் சார்பில் மூத்த வழக்கறிஞர் ரங்கநாதன் வாதிடுகின்றார். ஆனால் மாவட்ட நீதிமன்றத்தில் கோடீஸ்வனனின் முகத்தில் இருந்த புன்னகையானது உயர் நீதிமன்றத்தில் மெல்ல மெல்ல மறைகின்றது. ஆம் அது ஒரு தர்க்கரீதியான வாதம் "அரசு சேவையை நடைமுறைப்படுத்தும் விதிகள் மற்றும் கடப்பாடுகள் நீதிமன்றின் முன் செயற்படுத்தபட முடியாதவை" அதாவது அவை சார்பில் எந்த ஒரு நபராலும் மேற்கூறியவை தொடர்பாக நீதிமன்றத்தில்

வழக்குத்தொடுக்க முடியாது (The Provisions of the covenants and rules governing the public service are not enforceable by action). வழக்கே தொடுக்க முடியாது என்ற தீர்ப்பின் பிறகு ஆட்சிமொழிச்சட்டத்தை பற்றி வாதிட வேண்டிய எவ்விதமான வாய்ப்பும் உயர் நீதிமன்றத்தில் இருக்கவில்லை.(It was not necessary to consider the submission as to the invalidity of the official language act) அப்ப அவ்ளோதான் முடிஞ்சுப்போச்சானா அதான் இல்லை.



இன்றைய காலம் போன்று அன்று உயர்நீதிமன்றம் உச்சமாய் இருக்கவில்லை. இன்றைய மேன்முறையீட்டு நீதிமன்றம் போன்று இரண்டாம் ஸ்தானத்திலேயே விளங்கியது. அதியுச்சமாய் அன்று அரசவை~கோமறைக்கழகமே திகழ்ந்தது. ஆம் இந்த தடவை கோடீஸ்வரன் வழக்கை அரசவையில் மேன்முறையிடுகின்றார்.

அதால இந்தவாட்டி நாடு விட்டு நாடு ஏன் கண்டம் விட்டு கண்டம் பாய்ஞ்சு பிரித்தானியாவின் கோமறைக் கழகத்துக்குள் நுழைவோம்.

எளிமையா சொன்னால் அங்கு இப்ப என்ன வாதம் என்றால் இப்படி வழக்குத் தொடுக்கலாமா தொடுக்கமுடியாதா என்பதுதான். அதற்கு தீர்ப்பு வழங்க பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. முதல்வன் படத்தில் வாற மாதிரி இதெல்லாம் முன்னாடி இலங்கை அரசு சேவைக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டு கோமறைக்கழகம் வழங்கிய தீர்ப்புக்களின் லிஸ்ட் என்று அதனை மேற்கோள் காட்டி தீர்ப்பை வழங்கி விடுகின்றார். அதாவது இவ்வாறு வழக்கினைத்தொடர முடியும் என்பதே தீர்ப்பு! அப்புறம் என்ன ஒரு பக்கம் 32 பல்லும் எட்டிப்பார்க்குது மறுபக்கம் மூக்குடைந்து வேற வழியே இல்லாமல் நாடு திரும்புகின்றார்கள். So the Moral Of the Story is நியாயம் தான் ஜெயிக்கும்! தர்மம் தான் ஜெயிக்கும்! ஆனா என்ன கொஞ்சம் லேட்டா ஜெயிக்கும்! இது எக்காலத்திற்கும் பொருந்தும்!

சரி இதெல்லாம் இருக்கட்டும். அந்த ரணசிங்க யாரு? அவன எதுக்கு இதுல கோர்த்துவிட்டனி? அவன் என்ன ஆனான்?

***எதிர்பாருங்கள்.................***

## இவ்வாரம் படம் சொல்லும் கதை



# யாழ்ப்பாணப்பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களின் விவசாயப் பயிர்செய்கை

அவியாசன்
நான்காம் வருடம்
கலைப்பீடம்
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்



கலைப்பபீடமாணவர்களினால் உலகை அச்சுறுத்திவருகின்ற கொரோணா நெருக்கடி காலத்தில் மக்களுக்கு உதவுகின்ற உயரிய நோக்குடன் யாழ் - தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுள்ள கீரிமலைப் பிரதேசத்தை அண்டியுள்ள கருகம்பனைப் பகுதியில் பத்துப்பரப்பு தரிசு நில காணியில் ஆறு பேர் கொண்ட மாணவர்களினால் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் உதவியுடன் காணியை துப்பரவு செய்து அதில் பயிர்ச் செய்கை மேற்கொண்டனர். அந்தப்பிரதேச மக்களின் பூரண ஆதரவும் மாணவர்களுக்கு கிடைக்கிறது. குறிப்பாக நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும் விவசாய உபகாரணங்களை வழங்கியும் ஊக்கப்படுத்தி வருகின்றனர். மாணவர்களினால் கீரை, கத்தரி, வெண்டி, பயிற்றை, மிளகாய் என்பன பயிரிடப்பட்டு முதல்தரம் அறுவடையை செய்த மரக்கறிகளை தீவகம், வடக்கு ஊர்காவற்துறை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 150 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது.

"இருப்பவர்களிடம் இருந்து இல்லாதவர்களுக்காய்......" என்ற கூற்றினை கொண்டு இயங்கும் மாணவர்கள் மக்களுக்கு வழங்கிய மரக்கறிகளில் சிலவற்றை எமது பிரதேச விவசாயிகளிடம் இருந்தும் பெற்றுக் கொடுத்தனர். மேலும் தோட்டத்தில் விளையும் பயிர்களை விற்று தமது விவசாய நடவடிக்கை விரிவாக்கம் செய்வதோடு கிடைக்கும் இலாபத்தின் ஊடாக பின்தாங்கிய பிரதேசத்தில் வாழுகின்ற சிறார்களின் கல்வி தேவை பூர்த்தி செய்வதற்கு பயன்படுத்துவதாக மாணவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதன் முதற்கட்டமாக கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்தை அண்டிய தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை தோற்றும் மாணவர்களுக்கான பயிற்சி வகுப்புகளையும் ஆரம்பித்துள்ளனர். அத்தோடு இணையவழியிலும் மாதிரிப்பரீட்சை வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளனர். மற்றும் உட்கட்மைப்பு வசதி குறைந்த பிரதேசங்களில் சென்று புலமைப்பரிசில் தோற்றும் மாணவர்களுக்கு மாதிரி வினாத்தாள்கள் வழங்கி செயலமர்வுகளை நடாத்த திட்டமிட்டுள்ளனர்.



எமது மக்களுக்கு விட்டுத்தோட்டத்தினை ஊக்கி வைக்கும் முகமாக பத்தாயிரம் மரக்கறிக்கன்றுகளை மானிய விலை அடிப்படையிலும் குறிப்பிட்ட பிரதேசங்களை



கேள்வி: உங்களுக்கு எப்படியான உதவிகள் கிடைக்கபெற்றது?

பதில் : ஊரடங்கு அமுல்படுத்திய இரண்டு மூன்று நாட்களில் தீர்மானித்தோம் தோட்டம் செய்ய வேண்டும். பின்னர் பல சிரமங்களுக்கு மத்தியில் கருகம்பனை பிரதேசத்தில் 10 பரப்பு காணியை 3 வருடத்திற்கு குத்தகை அடிப்படையில் தந்து உதவினார்கள். உதவிகள் பெரிதாக கிடைக்கவில்லை என்றாலும் கமநலசேவை திணைக்களத்தினால் இலவசமாக உழவு இயந்திரத்தின் மூலம் மண் பண்படுத்தபட்டது. அதோடு மானிய விலையில் விதைகள், உரம் என்பன தந்தார்கள் மேலும் வர்த்தக நிறுவனங்களும் உதவி செய்தனர். எமது செயற்பாடுகளுக்கு ஊடகங்கள் உதவி செய்தன. எமக்கு மக்கள் பிரதிநிதிகளோ, பல்கலைக்கழக சமூகமோ ஆதரவுதரவில்லை என்பது கவலைக்குரிய



விடயமாகும்.

என்று குறிப்பிட்டுள்ளனர்.

தெரிவு செய்து இலவசமாக வழங்குவதற்கான பணிகளை மேற்கொண்டுள்ளனர். மேலும், குப்பிளான் பகுதியில் மூலிகைத்தோட்ட செய்வதற்கான வேலைத்திட்டங்களை இவ் மாணவர்கள் மேற்கொள்ளுகின்றனர். மேலும், விவசாயத்தில் ஈடுபடுகின்ற மாணவர்களிடம் மேற்கொண்ட கலந்துரையாடலில் கேட்கபட்ட கேள்விகளும் பதில்களும்.

கேள்வி: ஏன் விவசாயத்தினை மேற்கொள்ளவேணும் என்று சிந்தித்தீர்கள்?

பதில்: கொரோனா அச்சசூழல் நிலையினால் மக்களின் வாழ்வியல் பாதிக்கப்பட்டது. அதனால் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டது. சமூக நிறுவனங்கள், அரசியல் கட்சிகள், இளைஞர்கள், கொடையாளிகள் உலர் உணவுப்பொருட்களை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கினர்கள். ஆனால் மரக்கறிகள், மீன் வகைகள் மக்களுக்கு கிடைக்கவில்லை என்பதை உணர்ந்தோம். அதோடு இவ் அச்ச சூழல்நிலை அதிகரிக்குமாக இருந்தால் பொருளாதார பிரச்சினை ஏற்படும். உதவி செய்தவர்களுக்கும் இந்நிலை ஏற்பட்டால் மக்கள் பாதிப்பு அடைவர்கள் என்று உணர்ந்தோம். அதனால் ஊரடங்கு சட்ட காலப்பகுதியில் பிரதேச செயலாளர் அனுமதியுடன் விவசாய நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கு தீர்மானித்தோம்.



"இளைஞர்கள் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். விவசாயத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும்." என்பன அவர்களது வேண்டுகொள்கள்.

விஞ்ஞானம் இவ்வளவு வளர்ந்தும் இன்னும் முழுதாக அறியப்படாத மர்மம் எங்கள் மனம். மகிழ்ச்சி, கவலை இவ்விரண்டும் எங்கள் வாழ்வின் அங்கம். மூளையினுடைய ஒரு விதமான இரசயான மாற்றத்தின் வெளிப்பாடு. ஆனால் இவைகள் இரண்டுமே சாதாரண உணர்வாக வெளியே தோன்றிய போதிலும், உண்மையாக பல சிக்கலான இரசாயன தாக்கங்களும், மில்லியன் கணக்கான நரம்பு கணத்தாங்கங்களின் விளைவே ஆகும். எனவே மகிழ்ச்சி, கவலை ஆகிய இரண்டிற்கும் ஒரு வரையறைகள் உண்டு. அந்த வரையறையை அவைகள் தாண்டிச்செல்லும் போது அவைகள் மூளையினுடைய ஒரு குறைபாடாகவே மருத்துவ ரீதியாக கருதப்படுகிறது.





# மன உளைச்சல்

இப்போது விடயத்திற்கு வருவோம்.
எங்களுடைய நண்பர்கள் பலர் இன்று நகைச்சுவையாக உரைக்கும் வார்த்தை “மச்சான் நா செம்ம டிப்றெசன்ல இருக்கண்டா. நாளைக்கு பேசுவமாடா” . பரீட்சையில் புள்ளிகள் குறைந்தாலோ, காதலி போட்ட மெசேச்கு றிப்ளை பண்ணவில்லை என்றாலோ இந்த டிப்றெசன்/ மன உளைச்சல் என்ற வார்த்தையை கூறி விட்டு அடுத்த



நாள் பாக்கிலே டுயட் பாடுவார்கள். அப்படியென்றால் அவர்களை பொறுத்த வாரையில் ஒரு நாள் டிப்றெசன். முதலிலே இது டிப்றெசனா? . இல்லை நண்பர்களே . இது எல்லாம் சாதாரண கவலையான உணர்வு. தற்காலிக உணர்வு. டிப்றெசன் என்றால் என்ன என்று அறிந்தால் இவர்கள் எல்லாம் அந்த வார்த்தையே பயன்படுத்த மாட்டார்கள்.

Depression. மன உளைச்சல். இது ஒரு கொடிய நோய். இருதய பிரச்சனைகள், சிறுநீரக பிரச்சனை போன்று மன உளைச்சல் என்பது மூளையில் ஏற்படும் ஒரு விதமான நோய். செறோரனின் (serotonine) , நோர் அட்றீலனின் ( nor-adrenaline) போன்ற இரசாயன பொருட்களில் ஏற்படும் சமனிலை அற்ற தன்மை காரணமாக ஏற்படும் ஒரு விதமான கொடிய உணர்வு.

மன உளைச்சலிற்கு பிரதானமாக மூன்று அறிகுறிகள் உண்டு.

1. low mood ~ அதாவது ஒரு கவலையான / வெறுமையான உணர்வு.
2. anhedonia ~ வழமையாக ஒரு நாளிலே ஆர்வமாக ஈடுபடும் செயற்பாடுகளில் எல்லாம் எம்மால் ஈடுபட முடியாது.
3. lethargy - உடல் சோர்வாகவே இருக்கும்.

இந்த மூன்றும் தான் பிரதானமான அறிகுறிகள். ஆனால் இவற்றை தவிர வேறு வேறு பல நோய் அறிகுறிகள் உண்டு.

- ஒரு குறிப்பிட்ட விடயத்தில் கிரகிக்க முடியாது
- எங்களை நாமே பெறுமதி அற்றவர்களாக உணர்வோம்.

மருத்துவம் போற்றுதும்

• குற்ற உணர்வு மனதிலே இருக்கும்.

• எமக்கு உதவி செய்ய யாரும் இல்லை என்ற உணர்வு

• வாழ்க்கை இத்தோடு முடிந்து விட்டது. இனிமேல் எதிர்காலம் இல்லை என்ற உணர்வு. இது மிகக்கொடுமையானது. ஏன் எனில் இந்த போலியான உணர்வே தற்கொலைக்கு எம்மை தள்ளும்.

• நித்திரை கொள்ள முடியாது. வழமையாக நித்திரையில் இருந்து எழும்பும் நேரத்தை விட 3 மணித்தியாலயங்கள் முன்னதாகவே எழும்பி விடுவர். அத்துடன் பலருக்கு அதிகாலை வேளையிலே மன உளைச்சல் உணர்வு அதிகமாக இருக்கும். எனவே அதிகாலை . உதவிக்கும் யாரும் வர மாட்டார்கள். எனவே இந்த நேரத்தில் தான் அதிக தற்கொலைகளும் இடம்பெறுகின்றன.

• இதைவிட நடக்கும் வேகம், பேசும் வேகம் என்பவற்றில் மந்தம் காணப்படும்.

• கேட்ட கேள்விக்கு உடனடியாக பதில் சொல்ல முடியாது.

• அணிகின்ற ஆடைகள், தலை அலங்காரம் என்பவற்றில் அவ்வளவு கவனம் இருக்காது.

சில வேளைகளில் கடுமையான மனஉளைச்சல்களில் auditory hallucination காணப்படும். அதாவது அருகில் யாரோ நின்று கதைப்பது போன்ற பிரம்மை பிடித்த உண்ர்வுகள் எல்லாம் இருக்க முடியும்.

எனவே மேற்கூறிய நோய் அறிகுறிகள் அனைத்தும் ஒருவரிற்கு இருக்க வேண்டும் என்பது அல்ல. ஆனால் மன உளைச்சலிற்குரிய அறிகுறிகள் குறைந்தது 14 நாட்கள் இருக்க வேண்டும். இப்போது இந்த ஒரு நாள் கவலை எல்லாம் மன உளைச்சல் அல்ல. சிலருக்கு மன உழைச்சல் இரு வருடங்களிற்கு மேலதிகமாகவும் இருக்கலாம்.

யாரிற்கு மன உளைச்சல் வருவதற்குரிய வாய்ப்புகள் அதிகமாக உண்டு?

1~ பரம்பரையாக மன உளைச்சல் இருந்தால்/ அப்பா அம்மாவிற்கு

2~ உடலில் கடுமையான சில நோய்கள் இருந்தால்

•புற்று நோய்கள்

•இருதய நோய்கள்:.சிறுநீரக நோய்கள்

•நீண்டகால உடல்வலிகள்

•கைப்போ தைரோடிசம்( hypo thyroidism)

3~தனிமை



எனவே ஒருவர் மன உளைச்சலில் இருந்தால் அவரை எப்படியாவது வெளியே கொண்டு வரவேண்டும். ஏன் எனில் கடுமையான மன உளைச்சல் தற்கொலைக்கு இட்டுச்செல்லும். இதைவிட மன உளைச்சல் மூளையை கடுமையாக பாதிக்கும். எனவே மன உளைச்சல் என்பது ஒரு நோய் என்ற தெளிவான விளக்கம் இப்போது உங்களிற்கு இருக்கும் என நான் நினைக்கின்றேன். எனவே மன உளைச்சலுக்கு நாம் ஆளாகினால் அதை குறைப்பதற்கு நாம் சில நடைமுறைகளை பின்பற்றலாம்.

1~சமூக வலைத்தளங்களின் பாவனைகளில் இருந்து வெளியே வர வேண்டும்.

2~உடற்பயிற்சி செய்ய வேண்டும்


3~இயற்கையை இரசிக்க முடியும். வெளியே செல்ல வேண்டும்.

4~முக்கியமாக எமது பிரச்சனையை நம்பகமான ஒருவரோடு மனம் விட்டு சொல்ல வேண்டும்.

இதை விட முக்கியமாக மன உளைச்சல் நாளுக்கு நாள் அதிகரித்து சென்றால் , அதற்குரிய மருத்துவ உதவிகள் பல இருக்கிறது. மருந்துகள் இருக்கிறது. இதைவிட முக்கியமாக உளவியல் சார்ந்த மருத்துவம் இருக்கிறது. (Cognitive behavioral therapy)

எனவே எனதருமை உறவுகளே . மன உளைச்ச லிற்க்கு உள்ளான ஒருவருடைய மன நிலையை உணர்ந்து கொள்ளாமல் , அவரிக்கு உதவி செய்யாமல், சிறுபிள்ளைத்தனமாக அவர்களை எம் வார்த்தைகளால் துன்புறுத்தும் ஒவ்வொரு கணமும் நாங்கள் மிகப்பெரிய குற்றத்தை செய்து கொண்டு இருக்கிறோம் என்பதை நாங்கள் மறக்க கூடாது.

சுகுமாரன் சுஜன்.
3ம் வருடம்,
கொழும்பு மருத்துவ பீடம்.




இ.தனிஷ்ரன்

# இலங்கையில் நடக்கின்ற யுத்தம் நிறுத்து...

இந்து சமுத்திரத்தின் நித்திலம். ஆசியாவின் அழகான தீவு.

இலங்காபுரி, தப்ரபேன், செரண்டிப், சிலோன், இலங்கை, சிறீலங்கா.

வரலாறு எங்கும் நீர்வளமும் வர்த்தகமும் பொங்கி பெருகிய தீவில், அந்த நாளிலிருந்தே இரத்தம் சிந்து தலும் அழுகுரல் ஓலங்களும் சேர்ந்தேயிருக்கிறது.

இந்த தீவின் உச்சியிலே ஒரு பனைமரக்காடு. பேசும் மொழியால் தாங்கள் சோழர் வழி என்று கதை பேசுபவர்களும் வாழ்க்கை முறையில் அசல் மலையாளிகளின் சாயல் கொண்டவர்களு மாகிய மக்கள் வாழும் ஊர். சங்கத்து தமிழை தாங்களே பேணிப் பாதுகாப்பதாக பெருமை கொள்பவர்கள். மலையாளத்தின் அதே இழுவையில் தமிழ் பேசுபவர்கள். வேறுபட்ட மொழியில் ஒரே சொற்களை ஒரே அர்த்தத்தில் பகிர்பவர்கள். ஈழத்தமிழர்கள் எனும் "இலங்கைத் தமிழர்கள்" என்ற பொதுப்பெயரை "யாழ்ப்பாணத்தார்" ஆக்கிக் கொண்டவர்கள். இது யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணத்தில் ஒரு காதலர்கள். காதலர்களாக இருந்தும் தங்களை கணவன் மனைவியாக பாவித்து காதலை கொண்டாடுபவர்கள். யாழ்ப்பாணத் தமிழில் சொன்னால்,

"அந்த பெடியனும் உந்தப்பெட்டையும்
விரும்பினமாம். இரண்டு பேரும் வேற வேற ஆக்கள்.
பெடியன் கொஞ்சம் குறைவு போல! உவை
காதலிச்சாலும் தங்களை புரியன் பொஞ்சாதியா
நினைச்சுக்கொண்டு காதலில மிதக்கினம்."

//கால்கள் ரெண்டும் தரையிடம்
கோபம் கொண்ட கலவரம்
மிதந்து மிதந்து போகும்
பெண்ணாய் ஆனேனுங்கோ//

காதல் பிறந்துவிட்டாலே கூடவே காதலர்களுக்கு இறக்கையும் முளைத்துவிடுகிறது. புவியீர்ப்பின் ஆதிக்கத்திலிருந்து மெல்ல மெல்ல விடுபட ஆரம்பிக்கிறார்கள். தரையிலே கால் படாத உணர்வு. சந்திரத்தரையில் ஆம்ஸ்ரோங்காக மாறிய கிளர்ச்சி.

//கால் இருந்த இடத்தில் இப்போ
காற்று வந்து குடி இருக்கு
நடக்கவே தோணலைங்க
மிதக்கத்தான் தோணுதுங்க//

காதல் நோயினால் பசியின்மை ஏற்பட்டு எடை இழப்பது ஒரு புறம் இருக்க, காதலின் விழியீர்ப்பு விசையில் நிறை குறைவதும் காற்றில் பறப்பதும் நியூட்டனின் விதிகளுக்குள் அடங்காத விந்தை.

"நிலவினில் பொருட்கள் எடை இழக்கும்
நீரிலும் பொருட்கள் எடை இழக்கும்
காதலில் கூட எடை இழக்கும்
இன்று கண்டேனடி"

காதலில் எடை இழப்பது பொது அறிகுறி என்றால் எடை அதிகரிப்பதும் பொது அறிகுறி தான். அதனால் தான் காதல் நியூட்டனின் விதிக்கும் ஆக்கிமிடிசின் தத்துவத்துக்கும் அப்பாற்பட்டது.

//சேதி கேட்ட சந்தோஷங்கோ
பத்து கிலோ ஏறுதுங்கோ//

காதலுக்கு மட்டுமில்லை அன்பு என்று வந்தாலே அதீத சந்தோஷம் பெருகும் போதும் பெரும் சோகம் சூழும் போதும் ஒரு வித வெளிப்புற அழுத்தம் நெஞ்சுக்கூட்டை அடைக்கும். கழுத்தை இறுக்கும் கயிறாகி கஷ்டப்படுத்தும். அதே உணர்வு தான் இங்கே சந்தோஷ மழையில் நனைய பத்து கிலோவால் நிறையை கூட்டுகிறது என்ற புலம்பல்.



இப்படியாக காதல் மழையில் நனையும் யாழ்ப்பாணத்து காதலர்கள், காதலி காதலனை காதலோடு மரியாதை குழைத்து அழைக்கிறாள்,

//இஞ்சருங்கோ
இஞ்சருங்கோ//

பெருமானே! பதியே! தலைவா! பிராணநாதா! கண்ணாளனே! என்று கறுப்பு வெள்ளை காலத்திலிருந்து படிப்படியாக பெண்களின் சமூக நிலை உயர உயர கணவனை பெயர் சொல்லி அழைக்கும் வழக்கம் வளர்ந்தது. இன்று டேய்! அடேய்! என்று விழிப்புக்கள் மாறிவிட்டது. எந்த காலத்திலும் படுக்கை அறைகளில் 'டேய் புருஷா!' ஆசை வார்த்தை தான்.

யாழ் வழக்கில் கணவனை மனைவி அழைக்க, இஞ்சருங்கோ! இஞ்சையுங்கோ! இஞ்சரும்! என்னங்கோ! எனும் விழிப்புக்கள் தான் பொதுவாக இருந்தது. இப்பொழுதும் ஒரு சில இடங்களில் இருக்கிறது. இந்த இஞ்சையுங்கோ குழந்தை பிறந்து விட்டால், இஞ்சையப்பா! இஞ்சையுமப்பா! இஞ்சருமப்பா! அப்பா! என்று மாறி விடுகிறது. இதே பெண்கள் வெளியாளுடன் கணவனை பற்றி கதைக்கும் போது இவர், அவர் என்று மரியாதையுடனும் ஏதேனும் கோபமாக இருந்தால் இந்தாள், உந்தாள், இந்த மனுஷன் என்றும் மாறும்.

//பூமியே துரும்புங்கோ வானமே தூசுங்கோ
உங்க மூச்சு பட்டதுமே தோணுதுங்கோ//

இதுவே கணவன் மனைவியை அழைக்கும் போதும் இஞ்சையுங்கோ! இஞ்சரும்! அப்பா! என்ற அதே சொற்கள் அனேக நிச்சய திருமண தம்பதிகளிடம் இருக்கும். இன்னும் சிலர் மனைவியின் பெயரை சொல்லி, பெயரின் சுருக்கத்தை சொல்லி, செல்லப்பெயர் வைத்தென இந்த அழைப்புகள் வேறுபடும். வேறுபடும் அழைப்புக்களுக்கு ஏற்ற போலவே அவர்களுக்கிடையான பிணைப்பிலும் வேறுபாடுகள் இருக்கும்.

//என்ர கிளிக்குஞ்சே என்ர கிளிக்குஞ்சே
என்னை என்ன செய்தாய்
என்னவெல்லாம் செய்தாய்//

கிளிக்குஞ்சு , நாய்க்குட்டி, செல்லம், குட்டி, ராசாத்தி, குஞ்சு என்ற கொஞ்சல்கள் காதலியை



கொஞ்சும் யாழ்ப்பாணத்து காதலனின் சிணுங்கல்கள்.



//செல்லம் கொஞ்சி
நீங்க அழைக்கும்
நாய்க்குட்டி
ஆனேனுங்க//

யாழ்ப்பாணத்தில் இன்னொரு விழிப்பு இருக்கிறது.

அது மெய்யே!
மெய்யே! என்னவமாப்பா சங்கதி!

என்றவாறாகத்தான் அனேக தம்பதிகளுக்கிடையில் உரையாடல் ஆரம்பிக்கும். மெய் என்பதற்கு உடல் என்று பொருள். தன்னுடலையே தன்னவனுக்கு பாயாய் தருபவள் மனைவி. அதனால் மெய் என்ற விழிப்பு பொருத்தமானது தான். அதே நேரம் மெய் என்றால் 'உண்மை' என்ற பொருளும் இருக்கிறது. பழம் இலக்கியங்களில் மனைவியை 'சத்தியவதியே' என்று விழிப்பார்கள். சத்தியவதியின் யாழ் வடிவமென்றும் மெய்யேயை அர்த்தப்படுத்தலாம். அல்லது, எனக்கு உயிரானவளே! உண்மையானவளே! என்றும் செல்லம் பொழியலாம். இந்த 'மெய்யே!' என்பதன் திரிவுபட்ட வடிவம் தான் யாழின் இன்னொரு பொதுத்தளத்து விழிப்பு சொல்லான வெய்யே!

"தந்தை தந்த உயிர் தந்தேன்
தாய் தந்த உடல் தந்தேன்
உறவுகள் எல்லாம் சேர்த்து
உன்னிடம் கண்டேன்
மொத்தத்தையும் நீ கொடுத்தாய்
ஆனால் முத்தத்துக்கோ நாள் குறித்தாய்"

இதுவே கோபமாக கத்தும் போது, அடியேய்! எடியேய்! யேய்! என்று வார்த்தைகள் தடிக்கும். ஆனால் 'அடியேய்' என்பது இன்றைய தலைமுறைக்கு சுத்தமான ரொமான்டிக் வார்த்தை.

"அடியே அடியே என்ன எங்க நீ கூட்டிப் போற"

"அடியேய்! மனம் நில்லுனா நிக்காதடி!"

இதுவே வேற்றாளுடன் மனைவி பற்றிய உரையாடல்கள் வரும் போது மனுசி, இவள், அவள், இவள்பாவி, பெண்டில், பெஞ்சாதி, பொஞ்சாதி சிலசமயங்களில் பெயர் என்றவாறாக இருக்கும் உரையாடல்கள்.

"நீ தானே பொஞ்சாதி நானே உன் சரி பாதி"

//புத்தம் புது மனுஷனாய்
மாறி போனேனே
உயிரிலே வெள்ளி ஜரிகையும்
கலந்து தான் ஓடுதே
உருவமே தங்க சாயலாய்
மாறி தான் போனதே//

காதல் வந்தாலே புத்தம் புதிதாய் மாறுவதும் புதிதாக பிறப்பதும் வழமையானது தான். ஆண்கள் அதிவிஷேசம் அடிச்ச குஷியில் மிதப்பதும் பெண்களின் உடலில் புதிதாய் தங்கநிற மினுமினுப்பு தோன்றுவதும் காதலின் விளைவுகள்.

//கொப்பருக்கு மருமகனா ஆனேனே//

இங்கே, யாழ்ப்பாணத்தின் நையாண்டி திரிபு சேர்கிறது. அப்பா~ கொப்பா, அப்பர் ~ கொப்பர், அப்பன் ~ கொப்பன், அம்மா~ கொம்மா, ஆத்தை~ கோத்தை , அம்மான் ~ கொம்மான் இவ்வாறாக புகுந்த வீட்டுக்கு செல்லும் ஆண், பெண்ணின் தாய் தந்தை உறவுகளை கொஞ்சம் தாழ்த்தி, தன்னை கெப்பராக காட்டிக்கொள்வது பொது வழக்கம். இந்த எடுவையில் தான் 'அ' இல் தொடங்கிய வார்த்தைகள் 'கொ' வாக திரிபடைகிறது. யாழின் வழக்கத்தில் இதுவும் ஒன்று.

//தண்டணைகள் இனிக்குது
தவறு செய்ய துடிக்குது
செஞ்சதெல்லாம் நினைக்கேக்க
சிரிக்க தோணுது//

காதலில் தண்டனைகள் இனிப்பதாயும் அந்த இனிக்கும் தண்டனைகளை மீண்டும் பெறுவதற்காகவே அதே தவறை செய்யப் போவதாகவும் அந்த செயல்களில் இருக்கும் கோமாளித்தனங்களை எல்லாம் நினைத்துப்பார்க்க சிரிப்பு வருவதாகவும் காதலன் பாடுகிறான். காதலே ஒரு கோமாளித்தனம் தானே!

//அடிக்கடி காணும் ரகசிய கனவை
அம்பலமாக்கும் நாள் வர வேண்டும்
சிரிக்கவும் ரசிக்கவும் ருசிக்கவும் ஒஹோ
அந்த நாள் வந்ததே வந்ததே
வானவில்லை காணவில்லை
விடுமுறையில் இங்கே வந்துட்டுதே//



வானவில்லே பெண்ணாய் இங்கே வந்திருக்க, இவளுடன் கனவில் செய்த சில்மிஷங்களையும் சேட்டைகளையும் நிஜத்தில் செய்ய நாள் வந்ததாய் காதலி சம்மதம் சொல்கிறாள்.

யாழ்ப்பாணத்து ஜோடிகள் திருமணத்தின் பின் செல்லம் பொழிதல் அரிது. அப்படி யாழ் பேச்சு மொழியில் செல்லம் பொழிந்தால் அது தனி அழகு.

**'பிட்டு குழலுக்கு தேங்காய் பூ வ போல ஒன்னா கலந்திட நெஞ்சு துடிக்குது'**




வரங்களை எல்லாம் சாபங்களாக்கிய மனித இனம், இந்த கொரோனா எனும் கொடிய சாபத்திலிருந்து சில வரங்களை பெற்றுள்ளார்கள்.

ஓடி ஓடி களைத்தவர்களுக்கு ஓய்வெடுத்து தங்களைப்பற்றியும் தங்கள் குடும்பத்தைப்பற்றியும் யோசிக்க நேரம் கிடைத்திருக்கிறது. குடும்பத்தவர்களோடு நேரம் செலவிட, புத்தகங்கள் வாசிக்க, வீட்டுத்தோட்டம் செய்ய என்று பலவற்றுக்கும் நேரம் கிடைத்திருக்கிறது. மனிதன் ஓய்வெடுத்திருப்பதால் இயற்கையும் தன்னை புதுப்பித்துக்கொள்வதாக ஆய்வுகள் சொல்கின்றன.

எனவே, தும்மியின் கருத்துக்கணிப்பு முடிவாய் இதையே மக்கள் கூறியுள்ளார்கள்.

உலக அதிசயம், காதலின் சின்னம் என உன்னை உலகம் கொண்டாடிக்கொண்டிருக்க அவற்றை பெயராக்காமல் மயானத்தை பெயராக்கி எழுத வருகிறாயே? என்று நீங்கள் கேட்பது கேட்கிறது. மயானம் என்றால் என்ன? சடலங்களின் சங்கமம். இந்த பளிங்கு மாளிகை சில பலிகளை எடுத்தே எழுப்பப்பட்டது. எழுப்பியவன் அரசன் என்பதாலோ என்னவோ பலிகளின் பழிகள் என்மீது விழவில்லை. ஆம்! மூவர் மரணங்கள் இல்லை என்றால் இந்த மும்தாஜ் மஹால் இல்லை...

இலக்கியங்களும் சரி, வரலாறும் சரி என் எழிலுக்கு ஷாஜகானை மட்டுமே சொந்தக்காரனாக்கி இருக்கின்றன. வானத்தை பின்புலமாகக் கொண்டமைதான் என் பிரமாண்டத்தின் இரகசியம். ஆனால் இந்த பிரமாண்டத்திற்கு ஏன் இத்தனை சிறிய வாசல்? உன் காதல் எவ்வளவு பிரமாண்டமானதாகவும் இருக்கட்டுமேன். அதன் ஆரம்பம் கண்கள். கண்கள் சிறியவை. என் வாசலும் சிறியது. கண்கள் வழி நுழைந்த காதல் ஆகாசமளவு விரிகிறது. என் வாசல் வழி வந்து பாருங்கள். ஆகாசமளவு பிரமாண்டத்தை பார்ப்பீர்கள். என் நான்கு மூலைகளிலும் உள்ள கோபுரம் போன்ற நான்கு மினார்களும் சற்றே வெளிப்புறமாக சாய்ந்திருக்கும். கட்டிடப்பிழை என்று கருதி விடாதீர்கள். காலப்பிழையில் கோபுரங்கள் சரிந்தாலும் நடுவே உள்ள அந்த காதல்க் கண்ணீர்க் குமிழை உடைத்து விடக்கூடாது என்பதற்கான ஏற்பாடு அது.




*தொண்டரடிப்பொடியன்*

காதலை கொண்டாடாத காதலர்கள் இருக்கலாம்! ஆனால் என்னை கொண்டாடாத காதலர்கள் இல்லவே இல்லை! தாஜ்மஹால் என்றவுடன் மும்தாஜ் ஷாஜஹான் என்கிற காதல் நுரையே உங்களுக்கு தெரிய வரும். ஆனால் அந்த நுரைகளுக்குள்ளே வேறு இரு உள்ளங்களின் தித்திப்பான காதல் கப்பச்சினோ இருப்பது எத்தனை பேருக்கு தெரியும்? உலகில் காதலுக்காக அழப்பட்ட ஆகப்பெரிய அந்த கண்ணீர்துளி நான்தானாம். இருக்கலாம்! ஆனால் அழுதது யார்? ஷாஜகானா? ஆக்ராவில் இருந்து அறியப்படாத அந்த காதலை சொல்லப்போகிறேன். கேட்பதோடு நிறுத்தாமல் பலர் கேட்கும்படி செய்துவிடுங்கள். உண்மைக்காதலுக்கான மரியாதை அதுதான்.

நான் உருவான கதை என்பதால் பல சம்பவங்கள் நடந்த போது நானில்லை. எனவே, கண்ட சாட்சியாய் நானிருக்க வாய்ப்பில்லை. கேட்ட சாட்சியாகவே சொல்கின்றேன். வேண்டுமென்றால் தீர விசாரித்து முடிவெடுங்கள்.

முகலாய மன்னன் ஷாஜகானின் மூன்றாவது மனைவி மும்தாஜ்! அந்த மும்தாஜிற்கு பதினான்காவது குழந்தை பிறந்த போது இறந்தாள்! அன்றிலிருந்து ஆக்ரா அவனுக்கு மயானமானது. ஷாஜகான் கண்ணீரால் அருகில் ஓடிய யமுனா நதி பெருக்கெடுத்தது. தாரம் இழந்தவன் தலை இழந்தவன் என்பார்கள். பல தலைக்காரன் என்றாலும் மும்தாஜ் அவனின் இதயத்திற்கு நெருக்கமானவள்! மூன்றாவது மனைவி என்றாலும் காதல் மனைவி! இல்லாவிட்டால் மனைவியிடம் வர'தட்சணையாய்' சொத்துக்கள் வாங்கும் மனிதர்களிடத்தே தன் சொத்துக்களை தீர்த்து மாளிகை அமைக்க எண்ணம் கொள்வானா? ஆம்! தன்னவள் நினைவாய் ஒரு மாளிகை அமைக்க வேண்டும். உலகில் எங்கும் இல்லாத மாளிகையாய் இருக்க வேண்டும். விலை உயர்ந்த பளிங்கு கற்களில் கட்டப்பட வேண்டும். தன் காதல் அதில் தெரிய வேண்டும். அது காலம் உள்ளவரை தன் காதல் சொல்ல வேண்டும். கட்டுங்கள்! என்றான்.

எப்படி கட்டுவது? காதல் புனிதமானது என்பதால் மசூதி போலவா? இந்தியாவில் கட்டுவதால் கோவில் போலவா? ராணியின் உடலும் வைப்பதென்றால் பிரமிட் போலவா? வட்டமா? சதுரமா? செவ்வகமா? பலமுகமா? விழியும் மதியும் பிதுங்கி நின்றார்கள் அரச பிரதானிகள். மனமும் மதியும் கலங்கி நின்ற மன்னர் மரணத்தை பரிசளிக்க முன் உபாயம் தேடினர். அரசவை ஓவியன் ஹறின் அழைக்கப்பட்டு தம்பாரத்தை அவன் சிரத்தில் ஏற்றி வைத்தனர்.

'காலமெல்லாம் காதல் சொல்ல ஒரு மாளிகையை தாளில் வரைந்து நாளையே வருகிறேன். அதை தரையில் எழுப்ப தயாராயிருங்கள்' என்று அரசவையில் ஹறின் சொல்லிச்சென்றான். அந்த சொற்கள் அரசனின் காதில் தேனையும், அரச பிரதானிகள் வயிற்றில் பாலையும் வார்த்தன. பல நாள் காதலித்த திலோத்தியை கடந்த பிறை நாளில்த்தான் கரம்பிடித்திருந்தான் ஹறின். புதமணத் தம்பதிகளாய் காதல் கனிந்திருந்த வேளையில்த்தான் காதலுக்கு கட்டிடம் வரைய அழைக்கப்பட்டிருந்தான். காதல் கைவரப்

பெற்றவனுக்கு அதை ஓவியத்தில் கட்டிடமாக்குவதா கடினம்? அந்த தைரியத்தில்த்தான் நாளையே ஓவியத்தோடு வருவதாய் சொன்னான். நடந்தவற்றை திலோத்தியிடம் சொன்னான். கணவர் வரையும் ஓவியம் உருப்பெறப்போவதை எண்ணி உவகை அடைந்தவள் காதலும் கற்கண்டும் கலந்து ஒரு இனிப்பு செய்தாள். அந்த இனிப்பை சுவைத்தவாறே ஹரின் ஓவியம் வரைந்து முடித்தான்.

மறுநாள் அரசவை கூட முன்பே ஹரின் ஓவியத்தோடு காத்து நின்றான். தூரத்தே ஹரினை கண்ட ஷாஜகான் அரசரென்பதையும் மறந்து அவனைத்தேடி ஓடி வந்தார். கலைக்கான மரியாதை இது! ஓவியத்தின் வரவால் பலநாட்களின் பின்னர் மலர்ந்திருந்த அவர் முகம் ஓவியத்தை பார்த்ததும் மீண்டும் வாடிவிட்டது. ஓவியத்தை மறுத்துவிட்டது மன்னரின் முகம்! கறுத்துவிட்டது ஹரின் முகம்! விக்கிரமாதித்தனாய் முயற்சியை தொடர்ந்தான் ஹரின். பல தேசத்துக் கட்டிடக்கலைகளையெல்லாம் ஒற்றைத்தாளில் சேர்ப்பித்தும் பார்த்தான். இணங்கவில்லை அரசர் மனம்.

அப்படித்தான் அன்றொரு நாள் ஒரு வாரமாய் மெருகேற்றிய ஓவியத்தோடு அரசவை ஏறினான். வாடிய மன்னன் முகம் வாடியே இருந்தது. கலை நிறைந்த ஹரின் முகம் கலை இழந்து போனது. ஹரின் கொண்டுவந்த தாள் முழுதும் ஓவியம் நிறைந்திருந்தாலும், மன்னர் மனம் நிறையவில்லையே? காத்திருந்ததற்கான பலன் கிடைக்காததால் சினம் கொண்டவனானான் ஷாஜகான். ஹரினுக்கு மேலுமொரு வாரத்தை வரமாய் தந்த மன்னன் கூடவேயொரு சாபத்தையும் தந்தான்.

கலையோடு போனவன் கவலையோடு திரும்பினான். வாசலில் கனவுகளோடு காத்திருந்த காதல் மனைவி கணவனின் கவலை முகத்திற்குள் கரைந்து போனாள். 'மன்னர் மனம் ஓவியத்தால் அடுத்த வாரத்திற்குள் நிறையாவிட்டால் ஓவியனின் பிணம் ஜமுனா நதியில் மிதக்கும் என்று அரசாணை பிறப்பித்துள்ளார் அரசர். கட்டாயப்படுத்தியா கலையை வளர்ப்பார்கள்? எந்தக்கலையும் ஒரு பிரசவம் போன்றது. அதுவாய் வெளிப்படும் வரை காத்திருக்க வேண்டும். அவசரப்பட்டால் குறைப்பிரசவ நிலைதான்!' சொல்லி முடித்தான் ஹரின்.

நடந்தவற்றை கேட்டு நடுங்கிவிட்டாள் திலோத்தி. திருமணமாகி சில நாட்களிலேயே அரசவையிலிருந்து தன் கணவனுக்கு அழைப்பு வந்ததால் சந்தோசக்கடலில் மிதந்திருந்தாள். இப்போது மரண அழைப்பாய் மாறிவிட்டதால் கண்ணீர்க் கடலில் மூழ்கத் தொடங்கினாள். சிரிப்பொலிகள் நிரம்பி இருந்த புதுத்தம்பதியர் வீட்டில் நிசப்தம் நிறைந்திருந்தன. இதுவரை ராசிக்காரி என்று பேசிய ஊர் வாய்கள் மோசக்காரி என்று பேசத்தொடங்கின.

காதல் அவர்கள் காயத்திற்கு சற்றே மருந்து போட்டுக்கொண்டிருந்தது. ஒருவாரத்திற்கு ஒரு நாள் இருந்த இரவு. ஹரின் விரும்பிச் சாப்பிடும் மாம்பழங்களை வெட்டிக்கொண்டிருந்தாள் திலோத்தி. அவளது விரல்களை மாம்பழத்துண்டங்கள் என கத்தியும் கற்பனை செய்துவிட்டது போல. பதம் பார்க்கப்பட்டன அந்தப்பாவையின் விரல்கள். பதறிவிட்டான் ஹரின். மறுகணம், அவளது விரலை தன் வாய்க்கு விருந்தளித்து மருந்தளித்தான். அப்போது தான் திலோத்திக்கு சில வெளிச்சங்கள் மின்னின.

முடிவெடுத்தவளாய் மறுநாள் விடிந்ததுமே அரசவை சென்றாள் திலோத்தி! பெண் என்றால் பேயே இறங்குமாமே!
இறங்கினானா?
அரசன் இரங்கினானா?
அடுத்த இதழில் பார்ப்போம்!!!




**இப்படிக்கு,**
**மயானம் (தாஜ்மஹால்)**

### பங்கு முதலீடு தொடர்பான ஆபத்துக்கள்

பங்குதாரர் ஒருவர் முதலீடு செய்த கம்பனியொன்று முறிவடையுமாயின் குறித்த முதலீட்டு தொகையின் ஒரு பகுதியை அல்லது மொத்த முதலீட்டு தொகையையுமே இழக்க வேண்டிய நிலைமை முதலீட்டாளருக்கு ஏற்படக்கூடும். இதனை விட சந்தையில் பங்கு ஒன்றின் பெறுமதி வீழ்ச்சியடையுமாயின் பங்குகளை கொள்வனவு செய்த விலையிலும் பார்க்க குறைந்தளவிலான விலைக்கு விற்பனை செய்ய வேண்டிய நிலைக்கு பங்குதாரர் ஒருவர் தள்ளப்படுகின்றார். இவ்வாறான நட்ட அச்ச நிலைமையும் காணப்படுகின்றது. எவ்வளவு தூரம் இலகுவான இலாபத்தை ஈட்டிக் கொள்ள முடியுமோ அதே அளவிலான நட்ட அச்ச நிலைமையும் காணப்படுகின்றது. (High Risk High Return)




K.ஹிருபிகன்
Accounting & Business, Dip.in HRM , ACCA-UK (Reading), BBM (Reading)

### எச்சரிக்கைக்குரிய விடயங்கள்

நீங்கள் சந்தையைப் பற்றி ஆராயும் போது நிதி ஸ்திரத்தன்மையற்ற, மற்றும் உழைப்பில் சிறந்த பெறுபேறுகளை வெளிக்காட்டாத மற்றும் பங்குலாபத் தடப்பதிவுகள் அற்ற பங்குகள் என்பவற்றில் முதலீடு செய்யும் போது எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியமாகின்றது. ஓர் கம்பனியின் விளம்பரப்படுத்தப்படும் எதிர்கால வளர்ச்சியானது அதன் அடிப்படை ஆதாரங்களினால் ஆதரவு அளிக்கப்படாவிடின் இவை நடத்த அச்சம் மிகுந்த முதலீடாக கருதப்படும்.

> பங்குசந்தை என்பது மிக சாதாரணமான முதலீட்டு வழியொன்று என்பதைப் பலரும் விளங்கிக்கொள்வதில்லை. எனவே குறித்த விடயம் தொடர்பான மிக இலகுபடுத்தப்பட்ட தொகுப்பு ஒன்றை தொடராக எழுத தீர்மானித்துள்ளேன். இங்கு பதிவிடப்பட்ட விடயப்பரப்பினுள் ஏற்படும் கேள்விகளை /சந்தேகங்களை thumi2016@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கமுடியும் . அனுப்பப்படும் வினாக்களுக்கான பதில் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.

### பங்குகளில் முதலீடு செய்யும் போது ஏமாறுவதற்கான வாய்ப்புகள் உண்டா ?

பங்கு முதலீடு என்பது கம்பெனிகளின் உரிமையாளர்களில் ஒருவராக மாறுவதனையே குறிக்கும். இங்கு 'ஏமாறுவது' என்ற சொல்லை பயன்படுத்த முடியாது. எனினும் பங்குத்தரகர் ஒருவர் தனது வருமானத்தை / புரள்வு (Turnover) Targets அதிகரித்துக் கொள்வதற்காக பங்குகளை கொள்வனவு / விற்பனை செய்தல் நடவடிக்கையில் ஈடுபட முடியும். எவ்வாறிருப்பினும் பங்குதாரர் / முதலீட்டாளரின் ஒப்புதலின்றி இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட முடியாது. எனவே முதலீட்டாளர் விழிப்புடன் செயற்பட்டால் இவ்வாறான நடவடிக்கைகளிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

### பங்குசந்தையில் ஏமாறாமல் முதலீடு செய்ய உத்திகள் என்ன?

இங்கு பங்குத்தரகரின் ஆலோசனைகளை மட்டும் செவிமடுக்காது முதலீட்டாளர் ஒருவர் தாமாகவே சிந்திக்கவும் செயலாற்றவும் பழகிக்கொண்டிருத்தல் அவசியமாகின்றது. இதற்கு மேலதிகமாக கம்பெனிகளின் நிதி அறிக்கைகள், வெளிப்படுத்தல்கள் என்பன சார்பாக வாசித்து உணர்ந்து கொள்தலும் அவசியமாகும். மேலும் இங்கு துறை சாராத சாதாரணமானவர்களும் விளங்கிக்கொள்ளக் கூடியதாகவே கம்பெனிகளின் நிதி அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன.

### ஒரு கம்பெனி எத்தனை பங்குகளை வைத்திருக்க முடியும் ?

இங்கு பங்குகளின் எண்ணிக்கைக்கு வரையறை என்பது கிடையாது. இங்கு கம்பெனியானது பங்குகளின் எண்ணிக்கையை குறைக்க விரும்பினால் ஒருங்கிணைப்பு (Consolidation of Shares) செய்வதன் மூலமும், அதிகரிக்க விரும்பினால் பங்குகளை உபபிரிவாக்கல்(Subdivision of Shares) மூலமாகவும் மேற்கொள்ள முடியும். மேலும் உரிமை வழங்கல், பணம் சாரா பங்குலாபம் என்பனவும் ஏற்கெனவே இருக்கும் பங்குகளின் எண்ணிக்கையை அதிகரிக்க செய்யும்.



**பங்குகளின் விலை ஏற்ற இறக்கங்களை இலகுவாக கண்காணிக்க வழிகள் உள்ளனவா?**

ஆம்,
பங்குசந்தையில் முதலீடு செய்யும் நபரொருவருக்கு பங்குத்தரகர் நிறுவனத்தினால் online trading platform க்கான User id மற்றும் Password என்பன வழங்கப்படும், இவற்றை உபயோகிப்பதன் மூலமாக உட்பிரவேசித்து விலை ஏற்ற இறக்கங்களை கண்காணிப்பதுடன் கொள்வனவு / விற்பனை நடவடிக்கைகளிலும் ஈடுபடமுடியும். மேலும் பங்குகளில் முதலீடு செய்யாத சாதாரண நபரொருவர் விலை ஏற்ற இறக்கங்கள் மற்றும் ஏனைய தகவல்களை கொழும்பு பங்குபரிவர்த்தனையின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.cse.lk உள் பிரவேசிப்பதன் மூலமாக பெற்றுக்கொள்ள முடியும்.

**பங்குத் தரகர்கள் என்போர் யார்? அவர்களுக்கு எவ்வாறு வருமானம் கிடைக்கின்றது?**

பங்குதாரர்களுக்கு முதலீட்டு ஆலோசனைகள் வழங்கவும் பங்குதாரர்களுக்கும் மத்திய வைப்பு திட்டத்துக்கும் இடையிலான தொடர்பாளராகவும் செயற்படுதலே இவர்களது தொழிற்பாடாகும். இங்கு பங்குதாரர்களின் பங்குகளை முகாமைசெய்தல் மற்றும் அவர்களின் கொடுக்கல் வாங்கல்களை முறைமைப்படுத்துதல் தீர்ப்பனவுகளை மேற்கொள்ளல் முதலான செயற்பாடுகளை மேற்கொள்ளலே இவர்களின் தொழிற்பாடாக காணப்படுகின்றது. இவர்களது வருமானம் எனும் போது 100 மில்லியன் வரையிலான கொடுக்கல் வாங்கல் பெறுமதியின் 0.640% த்தை தமது தரகு வருமானமாகப் பெற்றுக் கொள்வர். இதுவே இவர்களின் பிரதான வருமான மூலமாகும்.


# நீங்களும் இணையலாம்!!!

- எழுத்துத்துறையில் ஆர்வமுள்ளவரா?
- புகைப்படங்கள் எடுப்பதில் பிரியமுள்ளவரா?
- ஓவியங்கள் வரைதலில் முனைப்பானவரா?
- பத்திரிகை வடிவமைப்பில் நாட்டமுள்ளவரா?

thumi2016@gmail.com

தூமி மின்னிதழில் இணைந்து பணியாற்ற அன்புடன் அழைக்கிறோம்.
மேற்குறித்த மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

# என் இதயம் எழுதும் சொல்

மாயா

4



அன்று அலுவலகத்திற்கு விடுமுறை கூறிவிட்டு ஆழ்ந்த உறக்கத்திலிருந்தாள் ஆராதனா. நான்கு வருடமாக தொலைத்து விட்டாள் என்று நினைத்துக்கொண்டு இருந்த ஆழ்ந்த உறக்கம். புன்னகை முகமாகவே தூங்கும் ஆராதனாவைக் கண்டு புன்னகைத்த நிலாவும் சத்தம் செய்யாமல் புதிதாக இணைந்துள்ள அலுவலகத்திற்கு சென்று விட்டாள். எந்த கடமையும் பொறுப்பும் இல்லாமல் உறங்குவதும் வரம் தான் போலும். தூக்கம் கலைய விழிகளை மெல்லத்திறந்தவள் சாளரத்தின் வழியே வந்து விழுந்த சூரிய ஒளியை முழுதாக அனுபவித்தாள்.

வார இறுதிகளில் கூட ஆதி இவளை சும்மா இருக்க விட்டது இல்லை. நல்ல சம்பளம் தான். ஆயினும் இது என்ன நில்லாமல் ஓட்டம் என அலுப்புத் தட்டாமல் இருந்தது இல்லை. ஆயினும் குடும்ப சூழல், தங்கைகளின் கல்வி செலவுக்கு எடுத்து இருந்த வங்கிக் கடன் இவற்றால் வாயை மூடிக்கொண்டு இருக்க வேண்டிய சூழ்நிலை. இப்பொழுது எல்லா பிரச்சனைகளும் ஓரளவு தீர்ந்து விட்டது. ஒரு தங்கை வேலை ஒன்றில் இணைந்தும் விட்டாயிற்று. ஆதலால் தான் தனக்கென சிறு இடைவெளியை எடுத்துக்கொள்ள விரும்பினாள். ஆனாலும் ஆதியின் எதிர்ப்பு அவள் எதிர்பார்க்காதது. அவனுக்கு இதெல்லாம் பெரிய விடயமே இல்லை. எதற்கும் தயாராக இருப்பான். ஏன் இவளது விலகலை மட்டும் அனுமதிக்காமல் இருக்கிறான் என்றே தெரியவில்லை. இருப்பினும் இம்முறை யாருக்காகவும் இவள் இளகுவதாக இல்லை. இது இவளது வாழ்க்கை. முடிந்தவரை அடுத்தவருக்காக வாழ்ந்தாகி விட்டது. இனி மூன்று மாதம் புதிதாக சேரும் காரியதரிசிக்கு பயிற்றுவித்த பின் அவளது கனவுகளை நனவாக்க வேண்டும். அத்துடன் அவளது ஷ்யாமை கண்டு பிடிக்க வேண்டும். ஷ்யாம்!! ஒரு பெருமூச்சுடன் நினைவலைகளில் இருந்து வெளியே வந்தவள் சோம்பலை முறித்தவாறு கட்டிலை விட்டு எழுந்தாள்.

அலுவலகத்தில் ஆதியோ வெறுமையாக இருந்த ஆராதனாவின் இடத்தை நோக்கியவாறே தொப்பென தன் சுழல் நாற்காலியில் அமர்ந்தான். 'என்னவாயிற்று இவளுக்கு? திடீரென வேலை வேண்டாம் என்று செல்வதென்றால்?! ம்ச். எப்படி என்னால் இதனை அனுமதிக்க முடியும்?' மனம் சிந்தித்த படி இருந்தாலும் கைகள் அவை பாட்டிற்கு வேலை செய்தபடி தான் இருந்தது. சிறிது நேரத்தில் பிரதீப் அவ்விடத்திற்கு வரவும் அதை கூட உணராமல் ஏதோ ஒரு சிந்தனையில் இருந்தான். அவனை விசித்திரமாக பார்த்தவாறே அவன் முன்னால் அமர்ந்தவன் 'ஆதி?!' என்று கேள்வியாக விளிக்கவும் திடுக்கிட்டு முன்னால் அமர்ந்து இருந்தவனை பார்த்தான்.

'என்னடா நடந்திச்சு? இப்பிடி யோசனைல இருக்க மாட்டியே நீ? ஆராதனா எங்கடா?' அவன் கேள்விகளை அடுக்கவும் அவனை வெறித்தபடி அமர்ந்து இருந்தானே அன்றி ஒரு வார்த்தை பேசினான் இல்லை. 'ம்ச். சொன்னா தானே தெரியும்' என்று சலித்தபடி பிரதீப் எழவும் 'ஆராதனா வேலையை விட்டு போறதா அறிவிச்சுட்டா' என்று முணுமுணுத்தான். 'என்னது?' என்று ஆச்சர்யமடைந்தவாறே மீண்டும் அமர்ந்தவன் 'என்ன திடீரென்று? ஆமா! அவங்க வேலையை விட்டு போனா உனக்கென்ன?' என்று சந்தேகமாக பார்க்கவும் என்ன பதில் கூறுவதென்றே ஆதிக்கு தெரியவில்லை. பதில் இருந்தால் தானே கூறுவதற்கு.

'ம்ம்..முதலாவதா என்ன செய்யனும்?' பேனாவால் நாடியைத் தட்டியபடி யோசித்துக்கொண்டு இருந்த ஆராதனாவின் முன்னால் அழகிய டயரி விரிந்து கிடந்தது. ஒரு கையில் சூடான கோப்பி அடங்கிய கப்பும் மறுகையில் பேனாவும் அள்ளி முடிந்த கொண்டையுமாக அழகான கலைந்த ஓவியமாக இருந்தவள் கைபேசி அழைக்கவும் கவனம் சிதைந்தாள். டிஸ்பிளேயில் 'ஆதித்யன் சார்' என்று மிளிரவும் புருவத்தை சுருக்கியவள் சந்தேகத்துடனே கைபேசியை எடுத்து காதில் வைத்தாள்.

"ஆராதனா!"


"யெஸ் சார்"

"அம்மாவும் அப்பாவும் உங்களை கூட்டிட்டு வர சொன்னாங்க வீட்டுக்கு!'

'ஏதும் ஸ்பெஷலா சார்? "

"ம்ம்..யா! அவங்களோட வெடிங் அனிவர்ஸரி! நீங்க ஆபிஸ்'க்கு வரல. நான் நீங்க வரமாட்டீங்க என்று தான் சொன்னேன். பட் தே ஆர் ஃபோர்ஸிங் மீ!"

ஆதித்யனின் அம்மா அவளுடன் மிகுந்த பாசமாக இருப்பவர். எவ்வளவு சொத்துக்கள் இருந்தும் அமைதியாக அடக்கமாக இருப்பவர். அவரை இவளுக்கு மிகவும் பிடிக்கும். அதனாலேயே சற்றும்



தொண்டையை செறுமி ஆராதனாவின் இருப்பை உணர்த்தினார். தங்களுடன் இல்லாமல் தனியாக வசிக்கும் மகனை ஏக்கத்துடன் பார்த்தவாறே முகபாவனையை சடுதியில் மாற்றியவர் புன்னகை முகமாகவே 'வாம்மா' என்று ஆராதனாவின் கைகளை பற்றியவாறு உள்ளே அழைத்து சென்றார். செல்லும் இருவரையும் பார்த்துக் கொண்டு இருந்த ஆண்கள் இருவரின் மனதிலும் பல பல கேள்விகள் குழப்பங்கள். ஒரு பெருமூச்சுடன் ஆதியின் புறம் திரும்பிய அவனது தந்தை

'என்னப்பா ஆராதனா கம்பனியை விட்டு போறதா கேள்விப்பட்டேன்?'

யோசிக்காமல்,
'சரி சார். நான் வாரேன்'
'ஓகே! ஐந்து மணிக்கு ரெடியாகி இருங்க. நான் பிக்கப் பண்ணிடுவேன்'
'இல்ல சா...'

அவள் மறுப்பை சொல்ல முன்னர் பீப் பீப் என்ற ஒலி தான் காதை வந்து தாக்கியது.
ஏதோ அவனே முன்னால் இருப்பது போல நினைத்து ஃபோனை வெறித்தவள் பின்னர் டயரியில் வேலையை விட்டவுடன் செய்யவேண்டியவற்றை பட்டியலிடத் தொடங்கினாள்.

ஆதியும் ஆராதனாவும் இறங்கியவுடனே ஆதி வந்த செய்தி அவனது பெற்றோருக்கு தெரிவிக்கப் பட அவனது அம்மாவும் அப்பாவும் விரைந்து வந்தனர். ஆதியின் அருகில் வந்த அவனது அம்மா அவனது முகத்தை வருடியவாறு
'எவ்வளவு நாள் உன்னைக் கண்டு' என்று கண்கலங்கவும் 'க்கும்' என்று அவனது தந்தை

அவர் ஆதியின் தந்தை அருணாச்சலம். கம்பனியை மகன் கையில் முழுதாக ஒப்படைத்தாலும் தகவல்கள் அனைத்தும் அவருக்கு உடனுக்குடன் வந்து விடும். தந்தையின் கேள்வியில் திடுக்கிட்டு தெளிந்தவன்,

"ம்.யா டாட். பட்"
"பட்?"
"விடமாட்டேன் டாட். ஆராதனாவை போக விடவே மாட்டேன்."

என்ற மகனின் முதுகில் தட்டியவர் நினைத்தது என்னவோ நல்ல காரியதரிசியை இழக்க மனமில்லை என்பது தான். ஆனால் அவன் மகன் மனதில் இருந்தது என்னவோ?!..

**மனம் திறக்கும்...**

# குடாநாட்டின் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கான உபாயமுறைகள்

அதிரன்

யாழ்ப்பாண மாவட்டத்தின் சுற்றுலாத் துறையினை விருத்தி செய்வதற்கான உபாய மார்க்கங்கள்
~அதிரன்~

மனிதன் தனது ஓய்வினைச் சிறந்த முறையில் கழிப்பதற்கும் வாழ்வினை இரசிப்பதற்கும் மேற்கொள்கின்ற பயணங்கள் சுற்றுலா என்ற வகைப்பாட்டின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றன. இலங்கையைப் பொறுத்தவரை அதிகளவு அந்நியச் செலாவணியினை ஈட்டித் தருகின்ற துறைகளில் சுற்றுலாத்துறை முக்கியம் இடம்பெறுகின்றது. 2019ஆண்டு சுற்றுலாத் துறையின் மூலம் 1,913,702 பேர் நாட்டுக்கு சுற்றுலாப் பயணிகளாக வருகை தந்ததுடன் 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 18% வீழ்ச்சியினைக் காட்டுகின்றது.) 2018 ஆம் ஆண்டு 2,333,796 பேர் நாட்டுக்கு வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளாக வருகை தந்திருந்தனர். இந்தத் தொகையானது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 10.3% அதிகரிப்பினைக் காட்டுகின்றது. இலங்கைக்குச் சுற்றுலாப் பயணத்தினை மேற்கொள்கின்ற பிராந்தியங்களில் ஆசிய பசுபிக் பிராந்தியம்(47மூ) முதலிடத்தில் இருப்பதுடன் அடுத்த நிலைகளில் ஐரோப்பா (43%), ஐக்கிய அமெரிக்கா (6%), மத்தியகிழக்கு (3%) மற்றும் ஆபிரிக்கா (1%) ஆகியன காணப்படுகின்றன. நாட்டுக்கு வருகின்ற சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கையில் நாடுகளினடிப்படையில் எமது அண்டை நாடான இந்தியா தொடர்ந்து முதலிடத்தில் இருப்பதுடன் முதல் பத்து நிலைகளில் ஐக்கிய இராச்சியம், சீனா, ஜேர்மனி, அவுஸ்ரேலியா, மாலைதீவு, ரக்ஷ்யா, பிரான்ஸ் மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளின் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். இலங்கை போன்ற வளர்ந்துவரும் சிறிய நாடுகளுக்கு சுற்றுலா முதலிய முதலீடு குறைந்த துறைகளின் மூலம் அதிக வருமானம் ஈட்டும் தொழில்முறைகள் சிறந்ததொன்றாகக் காணப்படுகின்றது. 2020 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கமானது 3 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை வரவழைக்கும் நோக்கில் தனது உத்தித் திட்டங்களை முன்னகர்த்திச் செயற்படுத்தி வருகின்றது. ஆனால் இலங்கை அரசாங்கத்தின் வேகம் போதுமானதாக இல்லை என்பது வெளிப்படையாகவே தெரிகின்றது. 2020 இல் மூன்று மில்லியன் என்ற இலக்கினைப் அடைவதனைப் பல்வேறு காரணிகள் பாதித்தன. அவ்வாறு பாதித்த விடயங்களில் பின்வரும் மூன்றும் முக்கியமாக அடையாளப்படுத்தப்படுகின்றது.

- ☐ 2018 இல் ஏற்பட்ட அரசியலில் ஏற்பட்ட தளம்பல் நிலை
- ☐ 2019 இல் ஏற்பட்ட ஏப்ரல் மாத தாக்குதல்
- ☐ 2020 இல் உலகை ஆட்டிப்படைக்கும் கொரோனா

முதலிரு காரணங்கள் இலங்கையுடன் நேரடியாகத் தொடர்புபட்டவையாகக் காணப்படுகின்றன.

## யாழ்ப்பாண மாவட்டத்தின் வரலாற்றுக்கால சுற்றுலாத்துறை

யாழ்ப்பாண மாவட்டத்தின் சுற்றுலா நடவடிக்கைகள் வரலாற்றுக் காலத்திலிருந்து ஆரம்பித்துள்ளமையை வரலாற்று ஆய்வுகளிலிருந்து நாம் அறிந்து கொள்ள முடிகின்றது. இரட்டைக் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை "மணிபல்லவம்" என அடையாளப்படுத்துவது நைனாதீவையே ஆகும். மணிமேகலையில் வரும் "ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்த காதை" பகுதியில் யாழ்ப்பாண மாவட்டத்தின் சப்த தீவுகளில் ஒன்றான நைனாதீவுக்கு தமிழகத்திலிருந்து சிலர் வருகை தந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அராபிய வணிகராக இருந்த இபன்பதூதா இலங்கையின் புத்தளத்திற்கு வருகை தந்ததாகவும் அப்போது யாழ்ப்பாண இராச்சியம் என்ற பெயரில் ஒரு இராசதானி இங்கு காணப்பட்டதாகவும் ஆரியச்சக்கரவர்திகள் மன்னர்களாக இருந்ததாகவும் குறிப்பிடுகின்றார். மேலும் அவ் இராசதானியின் மன்னர்களாக இருந்தவர்கள் கொடியவர்களாக இருந்தனர் என கப்பலோட்டி ஒருவன் மூலம் இபன்பதூதா அறிந்ததாகவும் பின்னர் மன்னனுடன் நட்புறவு பாராட்டி இலங்கை முழுவதையும் சுற்றிப் பரார்த்ததாகவும் தனது பயணக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். இவரைத் தொடர்ந்து அரசாசனம் தொடர்பாக ஏற்பட்ட முரண்பாடுகளைத் தீர்ப்பதங்காக புத்தபகவான் நைனாதீவுக்கு எழுந்தருளியதாகவும் அவரைத் தொடர்ந்த புனித

வெள்ளரச மரக்கிளையினை எடுத்து வந்த பிக்குனி சங்கமித்தை ஜம்புகோளப்பட்டினத்தில் வந்திறங்கியதாகவும் மகாவம்சம் குறிப்பிடுகின்றது. வசப மன்னன் காலத்தில் கண்டெடுக்கப்பட்ட வல்லிபுரம் சாசனம், யாழ்ப்பாண வைபவமாலை, மற்றும் சப்புமல் குமாரயவின் படையெடுப்பு, இரண்டாம் பராக்கிரமபாகு போன்றோரின் குறிப்புக்களும் ஆதாரமாகவுள்ளன. இவற்றினை விட வரலாற்று அகழ்வாராய்ச்சிகளின் போது கண்டெடுக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களும் அக்காலத்தில் வெளிநாடுகளுடன் வர்த்தகம் இடம்பெற்றதையும் அதன்பொருட்டு வெளிநாட்டவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்துள்ளனர் என்பதனையும் அறிய முடிகின்றது.

## யாழ்ப்பாணத்தின் சுற்றுலா விருத்திக்கு ஏதுவான காரணிகள்

வடமாகாணத்தின் தலைநகரமாகவும் இலங்கை வரலாற்றில் தனக்கென ஒரு தனித்துவத்தையும் கொண்டு விளங்குவது யாழப்பாண மாவட்டமாகும். வரலாற்றுக் காலத்தில் ஆரம்பித்த தொன்மையும் முக்கியத்துவமும் ஆரியச் சக்கரவர்திகள் மன்னராட்சிக் காலத்தில் முக்கியம் பெற்று இன்று இலங்கையின் முக்கிய நகரமாக வளர்ந்து வருகின்றது. வடமாகாணத்தைப் பொறுத்தவரை சுற்றுலாத்துறையானது 2009 ஆண்டின் பின்னரே மெதுவாக வளர்ச்சியடைய ஆரம்பித்துள்ளது. ஏறத்தாழ முப்பது வருடங்களாக இடம்பெற்ற உள்நாட்டுப் போராட்டமானது முடிவடைந்ததைத் தொடர்ந்து வெளிநாட்டு நேரடி முதலீடுகள், உள்ளூராட்சி மன்றங்களின் செளற்பாடுகள் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் துணையுடன் ஓரளவு வளர்ச்சியடைந்து வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது. இருந்தபோதும் இந்த வளர்ச்சி வேகம் போதுமானதாக இல்லை என்பது தான் யதார்த்தம்.



குடாநாட்டின் சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்கு பௌதிக மற்றும் மானிடக் காரணிகள் செல்வாக்குச் செலுத்துவதனை அவதானிக்க முடிகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்திற்கு அதிகளவான மக்கள் சுற்றுலா மேற்கொள்வதற்கு இங்கு நிலவுகின்ற காலநிலையின் சிறப்பான தன்மை முக்கியமான காரணியாகவுள்ளது. யாழ் குடாநாட்டின் காலநிலை ஏப்ரல்-செப்டம்பர் வரையிலான காலப்பகுதிகளில் அதிக வெப்பமான காலநிலையினையும் டிசம்பர்-பெப்ரவரி வரை குளிரான காலநிலையினையும் கொண்டு காணப்படுகின்றது. இக்காலநிலை தன்மையானது சுற்றுலாப் பயணிகளுக்கு உவப்பானதாக உள்ளமையினால் அதிகளவான மக்கள் சுற்றுலா நோக்கில் இங்கு வருவதனை நாம் அவதானிக்க முடிகிறது. மேலும் யாழ் குடாநாட்டின் புவியியல் தரைத்தோற்றத்தினை அவதானிக்குமிடத்து கரையோர சமவெளியினை கொண்டும், அழகிய தீவுகளினையும், பல்லுருவத்தன்மை வாய்ந்த கடற்கரைகளினையும், பாரிய மணல் மேடுகளினையும், கரையோரக் கண்டல் தாவர சூழற்தொகுதிகளையும் கொண்டு காணப்படுகின்றது. இயற்கை வனப்பும் கடற்கரைகளும் சுற்றலாப் பயணிகளைக் கவருகின்ற முக்கிய அம்சங்களாகும். யாழ்ப்பாண மாவட்டமானது பொதுவாக இவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளமையினால் அதிகளவிலான சுற்றுலாப் பயணிகளைக் கவருகின்றது.

குடாநாட்டின் பௌதிக சீதோஷ்ண நிலைகளைத் தாண்டி யாழ்ப்பாண மாவட்டத்தில் சுற்றுலாத் துறைக்காக மக்களினை ஈர்க்கின்ற மானிடக் காரணிகளாக பாரம்பரிய உணவுவகைகள், விளையாட்டுகள், உள்ளூர் உற்பத்தி பொருட்கள், சமய கலாசார நிகழ்வுகள், சிறப்பான போக்குவரத்துகள் மற்றும் தங்குமிட விடுதிகள் போன்றன காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. தமிழர்களுடைய கலாசாரம் ஏனைய இனத்தவர்களுடன் ஒப்பிடுமிடத்து மேன்மையானது. ஒவ்வொரு பகுதிகளும் தமக்கென்று தனித்துவமான பண்பாடுகள் பழக்க வழக்கங்களைக் கொண்டு காணப்படுகின்றன. ஏனைய பகுதி மக்களுடன் ஒப்பிடும் போது குடாநாட்டு மக்களின் உணவு, உடை மற்றும் பழக்கவழக்கங்கள் சற்றே வித்தியாசமானவை. அதிகளவிலான சுற்றுலாப் பயணிகளினை ஈர்க்கும் மாவட்டமாக யாழ்ப்பாணம் காணப்படுவதற்கு அதன் சிறப்புக்களும் முதனிலை வகிக்கின்றன.

*ஆய்வு தொடரும்...*

# சங்க கால திருமணங்கள்

விக்கி சாரங்கன்

பத்துப்பொருத்தம் பார்த்து ஒன்பது கிரகம் பார்த்து எட்டுத்திக்கு சாதி சனங்களை அழைத்து ஏழு கானங்கள் முழங்க அறுசுவை உண்டி பரிமாறி ஐம்பூதங்கள் ஆசி வழங்க நான்கு வேதங்கள் ஒலிக்க முத்தேவர்கள் ஆசி வழங்க இருமனங்கள் ஒத்து ஒருமணமாய் நடப்பது திருமணம் என்று இன்றைய பட்டி மண்டபங்களில் முழங்க கேட்டிருப்பீர்கள்! இப்படி மூச்சு விடாமல் பேசி முடிக்க... முழுச்சபையும் ஆரவரிக்கும். இப்படி இருந்த திருமணங்கள் பேஸ்புக்கிலும் பைபரிலும் இன்று நிச்சயிக்கப்படுவதாக பேசி முடிக்க சபை மீளவும் அதிரும். இப்படியாக தமிழர்களின் திருமணம் இருந்தது என்று பார்த்தால் இந்த சம்பிரதாயங்கள் எல்லாம் இடைச் செருகல்கள் தான்.



சங்க காலத்தில் எப்படி திருமணச் சடங்குகள் இருந்தது என்பதை அக்கால இலக்கியங்கள் படம் பிடித்து காட்டுகிறன. இன்றைய கமராமேன் செய்யும் வேலையை புலவர்கள் இலக்கிய நயத்துடன் செய்திருக்கிறார்கள். சங்க இலக்கியம் சொல்லுகின்ற திருமணம் பெரும்பாலும் அதிகாலைப் பொழுதிலே நடைபெற்றுள்ளது. சங்க செய்யுள்களிலே திருமணத்திலே அந்தணர்கள் இல்லை, அக்னி வலம்வருதல் இல்லை, வேதங்கள் ஓதப்படவில்லை, தேவர்கள் பற்றிய செய்திகள் எதுவும் இல்லை.

அப்ப எப்படி திருமண சடங்குகள் இருந்தது என்று யோசிக்கிறீர்களா? அக்காலத்தில் திருமண சடங்கு எப்படி இருந்தது என்பதை அகநானூற்று பாடல் மூலம் காணலாம். விருந்தினர்களுக்கு உழுத்தம் பருப்பு சேர்த்து சமைத்த பொங்கலோடு பெரிய சோற்றுதிரள் ஆக்கி வைத்திருக்கின்றனர். மரத்தூண்களை கொண்டு பந்தல் அமைத்து புதுமணலை நிலத்தில் பரப்பி வைத்துள்ளனர். அதிகாலைப் பொழுதில் முதுபெண்கள் பூக்களையும் நீரையும் தூவி ஆசீர்வாதம் வழங்கி பெண்ணை உரியவனிடம் கொடுத்ததாக சொல்கிறது. இவ்வளவோடு... திருமணம் முடிந்திட்டது. இந்த செய்தியை சொல்லும் பாடல் அகநானூறிலே..... பாடலாக அமைந்தது. தோழிக்குத் தலைமகன் சொல்லியது.

'உழுந்துதலைப் பெய்த கொழுங்களி மிதவை
பெருஞ்சோற் றமலை நிற்ப நிரைகால்
தண்பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி
மனைவிளக் குறுத்து மாலை தொடரிக்
கனையிருள் அகன்ற கவின்பெறு காலைக்
கோள்கால் நீங்கிய கொடுவெண் டிங்கள்
கேடில் விழுப்புகழ் நாள்தலை வந்தென
உச்சிக் குடத்தர் புத்தகல் மண்டையர்
பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்
முன்னவும் பின்னவும் முறைமுறை தரத்தரப்
புதல்வற் பயந்த திதலையவ் வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடிக்
கற்பினின் வழாஅ நற்பல உதவிப்
பெற்றோற் பெட்கும் பிணையை யாகென
நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி'
என்பதே அந்த செய்யுள்.

இன்னொரு அகநானூற்று பாடலிலே இறைச்சியுடன் சேர்த்து சமைத்த சோற்றை சுற்றாருக்கு கொடுத்ததாகவும் ரோகினி நட்சத்திரம் தோன்றிய காலை பொழுதில் முதுபெண்கள் மணமகளை நீராட்டி அவள் விழிகளை நோக்கியதாகவும் வானத்தில் தோன்றுவது போல ஒளி மணமேடையில்



தோன்றியதாகவும் அணிகலன்களால் மணமகளுக்கு ஏற்பட்ட வியர்வையை போக்கி ஆண்மகனிடம் கொடுத்ததாக சொல்லப்படுகிறது. அந்த அகநானூற்று பாடல்

'மைப்பறப் புழுக்கின் நெய்க்கனி வெண்சோறு
வரையா வண்மையொடு புரையோர்ப் பேணிப்,
புள்ளுப் புணர்ந்து இனிய ஆகத் தெள்ஒளி அம்கண்
இருவிசும்பு விளங்கத், திங்கட் சகடம் மண்டிய
துகள்தீர் கூட்டத்துக், கடிநகர் புனைந்து, கடவுட்
பேணிப், படுமண முழுவொடு பஷரூஉப்பணை இமிழ,
வதுவை மண்ணிய மகளிர் விதுப்புற்றுப், பூக்கணும்
இமையார் நோக்குபு மறைய, மென்பூ வாகைப்
புன்புறக் கவட்டிலை,
பழங்கன்று கழித்த பயம்பமல் அறுகைத் தழங்குகுரல்
வானின் தலைப்பெயற்கு ஈன்ற மண்ணுமணி அன்ன
மாஇதழ்ப் பாவைத் தண்நறு முகையொடு வெந்நூல்
சூட்டித். தூஉடைப் பொலிந்து மேவரத் துவன்றி,
மழைபட் டன்ன மணன்மலி பந்தர், இழைஅணி
சிறப்பின் பெயர்வியர்ப்பு ஆற்றித் தமர்நமக்கு ஈத்த
தலைநாள் இரவின், உவர்நீங்கு கற்பின்னம் உயிர்
உடம் படுவி! முருங்காக் கலிங்கம் முழுவதும்
வளை...'

ஆனால் சங்க இலக்கியத்தில் காட்டப்படுகின்ற இத்தகைய திருமண முறைகள் சங்க மருவிய காலத்தில் முற்றிலும் மாறிவிடுகிறது.

தமிழின் முதல் இலக்கணநூல் தொல்காப்பியம் திருமணம் பற்றி தருகின்ற குறிப்புக்கள் சற்று வித்தியாசப்படுகின்றது.அதற்கான காரணமும் நுண்மையாய் பேசப்படுகின்றது. தொல்காப்பியம் கற்பியல் களவியல் எனும் இரு வாழ்வியல் முறைகளை பேசுகிறது.கற்பியல் என்பது சம்மதம் சூழ வாழ்வமைத்து கொள்வதையும் களவியல் என்பது தம் இச்சைப்படி வாழ்வமைத்தலையும் குறிக்கின்றது.

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர்யாத்தனர் கரணமென்ப.."

என்ற தொல்காப்பிய சூத்திரம் மூலம் சடங்குமுறைப்பட்ட திருமணம் தொடங்கி இருப்பதைக்காணலாம்.

தமிழின் முதற்காவியமாக சிலப்பதிகாரத்திலும் திருமண நடைமுறைகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. திருமணம் தொடக்கம் மங்கள வாழ்த்துப்பா (40-60) வரையான பாடல்களில் இதற்கான சான்றுகள் கிடைக்கிறது. கோவலன் கண்ணகி திருமணத்தில் தீவலம் வந்ததாகவும் நறுமண புகைகள் போடப்பட்டதாகவும் மறையோன் மறை ஓதி திருமணம் நடைபெற்றதாகவும் சொல்லப்படுகிறது. 'மாமுது பார்ப்பான் மறைவழி....' என்ற வரிகள் இதனை பேசுகின்றது.

திருமண நடைமுறைகள் பற்றிய ஆண்டாள் பாடல்களிலும் நிறைந்து காணப்படுகின்றன. மனவுறுதி எடுத்தல், நாட்பார்த்தல் காப்புக்கட்டல் தாலிகட்டுதல், மாலை மாற்றல், கைபிடித்தல், தீவலம் வருதல், அம்மிமிதித்தல், பொறியிடுதல்(அறுகரிசியிடல்) போன்றன நடைபெற்றதாக பாசுரங்கள் மூலம் அறிய முடிகிறது.

இவ்வாறு கால ஓட்டத்தோடு தமிழர்களின் திருமண நடைமுறைகளும் மாற்றமுற்று வந்ததை இலக்கிய சான்றுகள் மூலம் அறிய முடிகிறது. ஒரு காலத்தில் வீடுகளில் நடந்த திருமணங்கள் கோவில் கோவில் மண்டபம் என்றாகி இன்றைக்கு கல்யாண மண்டபங்கள் என்றாகிவிட்டது. மாலைகளில் நடைபெற்ற திருமணங்கள் காலை என்றாகியது. ஊர்கூடிய சமையல் சாப்பாடு என்று களிப்புற்ற நிகழ்வு மண்டபக்காரர்களும் புகைப்பட கலைஞர்களும் முயற்சியில் முடிவுற்று போகிறது. நகைச்சுவையாக சிலர் சொல்லுவதுண்டு நாட்குறித்து திருமணம் செய்த காலம் போய் மண்டபங்களில் தேதி கேட்டு திருமணம் வைக்கும் காலமாகிவிட்டது என்று. எது எவ்வாறு நடைமுறைகள் மாறினாலும் தமிழர்களிடையே திருமணம் ஒரு சடங்கு சம்பிரதாயம் ஒரு பண்பாடு ஒரு வாழ்வியல் ஒரு வரம்!



'காதலற் பிரியாமல் கவ்வுக்கை ஞெகிழாமல்..'
இல்லறத்தில் இணைந்தோர் இணையபோகிறவர்கள் வாழட்டும்!!!!!

ஜீவா ஷஜீவனின்

# சிங்ககிரித்தலைவன்

ஆட்சி 04

## 4.துறவறம் துறந்தார்!

இன்னும் ஆயிரம் ஆண்டுகள் தாதுசேனனின் பெயரையும், ஏந்தி நிற்க போகின்ற கலாவாவி குளிர் அலைகளைக் கரைக்கு எடுத்து வந்து கொட்டுகிறது...

அந்த வாவியின் மறுகரை தூரத்தே, தெரிந்து...தெரிந்து நீரோட்டங்களால், மறைந்து...மறைந்து ஜாலம் செய்கின்றது! தாதுசேனனின் ஆட்சியின் ஒரு பெரிய சாதனை கரை மறந்து நிற்கிறது! மாத்தளை குன்றுகளில் உற்பத்தியாகி மகா நதியாக ஓடிவரும், கோண நதியை முழுவதுமாய் மேற்குக்கடலில் கலக்கவிடாமல், மல்வத்து பள்ளத்தாக்கை அடுத்து அணைபோட்டுத் தடுத்திருந்தான் தாதுசேனன்! அதுவே கலாவாவியாக, அனுராதபுரத்து விவசாயத்தின் அமுதசுரபியாகி நிற்கிறது!

பொங்கிவந்த ஆற்றைத்தடுத்தவன், உள்ளே ஊற்றெடுக்கும், குழப்பத்தை ஆற்றுப்படுத்த முடியாமல் தவிக்கின்றான்! எந்த வீரனுக்கும் இதயம் என்பது, மென்மையானது தானே...
தீர்க்க முடியாத பிணக்குகளும் துன்பங்களும் இதயத்தைத் துளைக்கும் போது, கடவுள் என்ற மருந்து தேவைப்படுகிறது!

நாட்டு நிர்வாகமே ஒரு குழந்தையின் கையில் இருக்கும் முட்டையினை போலாகிவிட்டது மன்னன் என்ற பெயருக்கு மட்டும் தான் தாதுசேனனால் சொந்தம் கொண்டாட முடிந்ததே தவிர, அதற்குரிய நிமிர்வை அண்மைக்காலமாக இழந்திருந்தார்!

வண்டாடும் சோலைகளும், தென்றல் வீசும் தோப்புகளும், சோகத்தை தம்மில் சுமந்து அந்த கார்த்திகை மாதத்தில் கடும் தவம் இயற்றிக் கொண்டிருந்த அனுராதபுரத்து, அபயகிரி கல்விக்கூடத்தை நோக்கி, பட்டத்து யானை ஆடி அசைந்து வந்து கொண்டிருக்கிறது....

சந்தேகமே இல்லை மன்னர்தான் தன் பரிவார சகிதம் வருகிறார்!
அது சரி இங்கு ஏன் வருகிறார்?
யானை நின்றுவிட்டது அரசர் இறங்கி தானே நடந்து வருகின்றார்!
மகாபோதி சங்கத்தை நோக்கி,

“தேவா...நாதா...மாதவா... உன் அடிமை ஆட்கொள்...."
தாதுசேனன் இந்த வார்த்தைகளை உதிர விட்டபடி ஓட்டமும் நடையுமாக ஓடி வந்து மகாநாம தேரரின் கால்களில் பணிகின்றார்!

“எழுந்திரு மன்னா...!”

தன் முகங்களை கைகளால் தடவிக்கொண்டு மெல்ல எழுந்த சேனனை மார்போடு அணைத்து விடுத்தார்!

“தேவா என் மனதில் நிம்மதி இல்லை என்னிடம் இருந்து என் உயிர் தவிர்ந்த யாவையும் எங்கோ சென்று மறைந்து விட்டதாக உணர்கின்றேன்... தனிமையில் தவிக்கின்றேன்...ஐயனே என்னை ஆட்கொண்டு அருள வேண்டும்!”

“சேனா ஒரு நாட்டின் தலைவன் நீ... இப்படி விரக்தியுடன் பேசக்கூடாது சோதனைகளும் வேதனைகளும் லௌகீக வாழ்வின் இயல்பு! ஆனால் அவை நிலையானவை அல்லவே! இறைவனுக்கு அடுத்தபடியாக மன்னனையே மக்கள் நம்புவார்கள்.... அவர்கள் அப்பாவிகள் அவர்களை வழிநடத்தும் ஆளுமை உன்னிடம் உள்ளதால்தான் மாதவன் உன்னை தலைவனாக நாட்டின் மன்னனாக அருளினான்...”

இங்கனம் தேரர் உரைக்க அனைவரும் அவர் பின் சென்று போதி மாதவனின் சிலை முன் நின்று வணங்கினர். குழப்பம் மிக்கவராய் மன்னர் தேரரை பார்த்தார்... தேரரோ, கண்களை மூடிக் கொண்டு சில வினாடிகள் கழிந்த பின் விழித்தார்.

“இன்னமும் மன்னா உன் உள்ளத்தில் சலனம்

இருப்பதை என்னுள்ளம் உணர்கிறது!"

"ஆம் தேவா மனதினை அமைதிகொள்ள செய்ய முடியவில்லை... அரசுப் பதவியை துறந்து.... துறவறம் ஏற்க சித்தம் கொண்டுள்ளேன்! குடும்ப பதவிச் சிறைகளுக்குளிருந்து மீண்டு, நான் நித்திய ஆனந்தத்தையும் அமைதியையும் நாட போகிறேன்... நான் செய்த தவறுகளை களைய இவ்வழி சிறந்தது எனும் முடிவை எய்திவிட்டேன்..."

மகாநாமர் உள்ளத்தில் பூத்த புன்னகை வாய்வழியாக மலர்ந்தது...

"நீ இப்போது இருக்கும் சூழ்நிலை உன்னை இங்கனமுரைக்கச் செய்கிறது... ஆனால் நடக்கப்போவது நேர் எதிரானது என்பதை நான் அறிவேன்! பதவி என்பது ஒரு போகம் அதிலுள்ள மோகத்தை விடுவது...அவ்வளவு எளிதல்ல!"

"தேவா குழப்பமான வார்த்தைகள் வேண்டாம்... ஒன்று நீங்கள் என்னை உங்கள் சீடன் ஆக்கிக்கொள்ள வேண்டும்... இல்லையெனில் என் பிரச்சனைகளை களையச் செய்ய வேண்டும்.... அதற்குத் தாங்கள்.....மீண்டும்...."

"புரிகிறது வேந்தே...உன் திட்டம் நன்கு புரிகிறது! ஆனால் அது எப்போதோ முடிந்த முடிவாக, இந்த காலத்தின் கட்டளையை நான் ஏற்கத்தான் வேண்டும்! இதனை ஞானச் சுடரான போதிதர்மனின் கட்டளையாக, நான் ஏற்கிறேன்!"

மன்னனின் காய்ந்த முகத்தில் ஈரப்பசை ஓடியது... தான் எதை நாடி வந்தாரோ..அது நிறைவேற போகிறது என்ற ஆனந்தம் அவர் உடல் பூராகவும் பரவியதை அருகில் நின்றவர்கள் உணர்ந்து கொள்கிறார்கள்!

மகாநாம தேரர் மீண்டும் மகாநாமனாகபோகின்றார்!

தன் பத்தாண்டு காலத்தவ வாழ்வை விடுக்கப் போகிறார்! தாதுசேனனின் தாய்மாமனார் தான் மகாநாமர்! இவர்கள் சந்திக்கும் இந்த நாளில் இருந்து சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் அரச பதவியில் அமைச்சராகவிருந்தார்! எனினும் முன்கோபக்காரரான, ஆரியசேனருக்கும் இவருக்கும் இடையில் ஒரு நாள் அரசவையில் கருத்து மோதல் இடம்பெற்றது... அது பின் படிப்படியாக வளர்ந்து விட்டது! ஆறுமாதங்கள் கடக்கவே, அப்போது முதலமைச்சராக இருந்த மாகியனாகர் இறந்து



போய்விட அடுத்த முதலமைச்சருக்கான தகுதியுள்ள ஆரியசேனருக்கும், மகாநாமருக்கும் இடையே பனிப்போர் இடம்பெற்றது!

இறுதியில் அரசவை கூடியிருந்த வேளை மன்னனும் மற்றவர்களும் திகைத்திருக்க, மகாநாமர், பிக்குவாக கோலம் கொண்டு மன்னனிடம் சொல்லாமலேயே அரசவையை விட்டு வெளியேறிவிட்டார்! மகாநாமரும் ஆரியசேனரும் மன்னருக்கு இரு கண்களுக்கு ஒப்பானவர்கள்! எனவே என்ன செய்வதென்று அறியாமல் மன்னர் அமைதியாகவிருந்துவிட்டார்! ஆனால் இப்போது நிலைமையோ தலைகீழ்! ஆரியசேனரும் மறைந்துவிட்டார்! நாட்டிலும் குழப்பநிலை. எனவேதான் வேறு வழியில்லாது மகாநாமரை நாடி வந்து விட்டார் மன்னர்!

அந்தக் குடிலின் கதவுகள் திறந்து விட்டன! உலக ஆசாபாசங்களை திறந்த ஒரு துறவியாக உள்ளே போனவர், உலக வாழ்வில் மீண்டும் இணைய வருகின்றார்... காவி உடையை களைந்துவிட்டு இடையிலும் தோளிலும் பட்டாடை அணிந்துவிட்டார்! கட்டுப்பாடுகளைத் தகர்த்து விட்டார்! பிச்சை பாத்திரத்தை பிரிந்துவிட்டார்! சுருங்கக்கூறின் துறவறத்தை துறந்து விட்டார்! குறிப்பறிந்து கொண்டவர்கள் உரக்கக் கூச்சலிட்டனர்!

“மாமன்னர் வாழ்க! முதல்மந்திரி மகாநாமர் வாழ்க...!” இந்த கோஷங்களை பிளந்துகொண்டு மகாநாமரின் குரல் ஒலித்தது!

“போதும் போதும்... இந்த உலகில் தற்காலிகமாக, திடீரெனத் தோன்றி திடீரென மறைந்து போகும் மனித வேடத்தை நான் ஏற்றிருக்கிறேன்... இந்த அமைச்சுப் பதவியும் தற்காலிகமானதே... இதை மன்னர் நன்கு அறிவார் என்று நினைக்கிறேன்... அறிஞர் பலரின் தூண்டுதலாலும், போதிமாதவன் பெயராலும், வம்சம் வம்சமாக... வழிவழியாக வந்து இந்த சிங்கள தேசத்தை ஆண்டவர்களின் வரலாற்றுப் பின்னணியை ஒழுங்குபடுத்தி, நான் புனையும் ‘மகாவம்சம்’ என்ற புனித வீரகாவியம் இடையில் தடைபட்டு விட்டமை எனக்கு வருத்தத்தைத் தந்தாலும், இறந்த காலத்து வரலாற்றை விட நிகழ்காலத்தின் சுபிட்சமே முக்கியமாக இருப்பதனால், அதை கிடப்பில் இட்டு மன்னனோடு உறுதுணையாக நிற்பேன் என்பதையும் இத்தால் சகலர் முன்நிலையிலும் ஏற்றுக்கொள்கிறேன்!”

“மிக்க நன்றி மாமனாரே...மிக்க நன்றி நன்றி...” மன்னர் மகிழ்ச்சியில் தடுமாறினார்!

“எனக்கு கூறக் கூடாது...ஏனெனில் இதை நான் தேசத்துக்கு செய்யும் தொண்டாக எண்ணி உளப்பூர்வமாக ஏற்கிறேன்!”

“தேவா தங்கள் சித்தமே இனி எங்கள் விருப்பமாக இருக்கும்!”
எங்கிருந்தோ ஒலித்த கலிங்க பண்டாவின் குரலை ஆமோதிப்பதாய் அனைவரும் தம் தலைகளை அசைத்து கொண்டனர்!

“இல்லை பண்டா அவர்களே, தனியே எனது விருப்பங்கள் நிறைவேறினால் நாட்டில் குழப்பமும் சிக்கலும் தான் ஏற்படும். அனைவர் விருப்பங்களும் கலந்து ஆலோசிக்கபட வேண்டும்! அதன் பின் அதிலிருந்து ஒரு சிறந்த தீர்மானம் எடுக்கப்பட வேண்டும்! அதுவே மக்களுக்கு நிம்மதியான வாழ்வைத் தரும் வழிமுறையாகும்!” என்று கூறியவாறே மகாநாமர் மன்னரை பார்த்தார்! மன்னர் கண்களில் இருந்து இரண்டு துளிகள் பூமியைத் தொட்டன...

“மாமனார் என்ற உறவுப்பந்தத்தையும், மகாமந்திரி என்ற பதவியையும் தாண்டி, சமத்துவ ஆட்சியின் அடிகோலாக மாறி விட்டீர்கள்... வாழ்க வாழ்க... உம் புகழ் வாழ்க!!”

“அதற்காக நீ கௌரவத்திற்காக மட்டும் அரியணையில் வீற்றிருப்பாய் என்று ஆகிவிடாது நீயே மக்களின் தலைவன்... இந்த லங்காதேவியின் மண்ணில் விளையும் எல்லா பயனுக்கும் உரித்துடையவன் நீயே... சர்வாதிகார சாயல் தான் மன்னனுக்கு அழகு... யாரும் நான் முன்பின் முரணாக சொல்வதாய் தவறாக எண்ணிவிட வேண்டாம்... சம உரிமைகள் இருக்கத்தான் வேண்டும். ஆனால் அது ஒரு அதிகாரத்தலைமைக்கு உட்பட்டு இருத்தல் வேண்டும். அதன் மூலமே நாடு பிளவுபடுவதையும், கடந்த காலங்களைப்போல், வெளிநாட்டு ஆதிக்கங்கள் எம்மை ஆட்சி கொள்ளாமல் இருப்பதற்கும் உதவும்!”

மகாநாமரின் அவரின் பேச்சு, அனைவர் மனங்களிலும் மகிழ்ச்சியைத் தந்தது... கலிங்கபண்டாவைத் தவிர...
பட்டத்துயானை பணிந்தது... துறவறம் துறந்தவர் யானையில் ஏறிக் கொண்டார்! மன்னர் முன் செல்ல யானை அரண்மனையை நோக்கி நகர்ந்தது...!

**நகரும்....**

கவலைகள் மறந்து சோகங்கள் பறந்திட ஒரே ஒரு மருந்து போதை என்ற நிலையிலேயே, இன்று எத்தனையோ வீடுகளில் வறுமையும், சந்தோஷமும் இன்றிய நிலைக்கும் ஒரு காரணமாக இருப்பதும் அதுவே.

குடும்பத்தில் உள்ள சிறிய விடயத்தைக் கூட பொறுமையின்றி தீர்வைப்பெற்றிட தடையாய் காணப்பட்ட போதைப்பொருள் பாவனையால் பலரது வாழ்க்கை முற்றுப் பெறாத தன்மையில் காணப்படுகிறது.

விடயம் அறிய கூடியதாக இருந்தது.

நாகரிகம் என்றும் , துணிந்தவன் என்றும் வெளிப்படுத்த பழகும் இப்பழக்கத்தால் அடிமையாகுவதுடன், மற்றவர்களையும் உட்படுத்தும் நிலை இருக்கத்தான் செய்கிறது. போதையால் சிறிய விடயத்தைக் கூட தீர்க்க முடியாதளவுக்கு மூளை சுயநினைவற்ற தன்மையும் ,உடலை சுயகட்டுப்பாட்டுக்குள் கொண்டுவராத நிலை போன்றவற்றால் தவறான வழியில் பலர் செல்கின்றனர்.

# மாற்றத்தை காண்போம் வாழ்வில்..!

காலையில் எழுந்து சாப்பாடு இல்லாமல் மதிய வெயில் சுட்டெறிக்க கூலி வேலை, மேசன் வேலை செய்துவிட்டு மாலைப் பொழுதில் உழைத்த பணத்தை குடித்து விட்டு வரும் அப்பாக்கள் இருக்கும் குடும்பத்தில் ஐயோ என கதறும் அம்மாவின் குரலும், அம்மாக்கு அடிக்காதேங்கப்பா என்று குழந்தைகளது கதறலும் ஊரை திடுக்கிட செய்யும்.

ஆசையாய் கொஞ்சி விளையாடும் குழந்தைகளும், அன்பால் அரவணைக்கும் மனைவியும் ஏனைய உறவுகளது மனம் படும்பாட்டை அவர்களால் உணரமுடிவதில்லை.

கல்வி பயிலும் மாணவர்கள் உள்ள வீட்டில் போதை பொருள் பாவனை உடையவர் தன் நிலை மறந்து செயற்படுவதால் அவர்களது எதிர்காலம் கேள்விக்குறியாகின்றது.

வாழ்க்கை எனும் நாடகமேடையில் போதை பாவிக்கவில்லை எனில் என்னால் எதையும் செய்ய முடியாது என கூறுபவர்களும் உண்டு.

சில நாட்களுக்கு முன் பெண் ஒருவர் கூறியிருந்தார் எந்த மாந்தராலும் செய்ய முடியாத போதை தடுப்பை கொரோனா செய்ததாகவும், இப்போது தனது கணவர் வீட்டில் சந்தோஷமாக இருப்பதாகவும் இதனால் கொரோனக்கு நன்றி கூறுவதாகவும் கூறிய

புகையிலையில் உள்ள நிக்கோட்டின் தீவிரமான போதை பழக்கத்தை உண்டாக்கும். சில நாட்கள் உற்சாக உணர்வை தந்தாலும் நாட்கள் செல்லச் செல்ல இதயம், நுரையீரல், வயிறு, நரம்பு மண்டலம் என உடல் பாதிப்பை ஏற்படுத்தும். போதைப்பாவனையால் ஏற்படுகின்ற உடல் ரீதியான பாதிப்புகள் மட்டுமின்றி உளரீதியான பாதிப்பையும் ஏற்படுத்துகிறது.

சாதாரணமாக ஆரம்பிக்கும் ஒரு தேவை நாளடைவில் அடிமைத்தனமாக மாற்றுவது மூளையில் இருக்கும் Reward center என்ற பகுதி. இக்காலப்பகுதியில் போதை என்பதை விடுத்து எதிர்கால முன்னேறத்துக் ஷகான ஓர் விடயத்தில் முழு கவனத்தையும் செலுத்தி ஈர்ப்பை பெறலாம்.

இத்தனை நாட்களும் போதைவஸ்து பாவனையின்றி நடத்தையிலும்,உள்ளத்திலும் மகிழ்ச்சியான மாற்றத்தை கண்டறிந்த நாம் போதையற்ற உலகை உளத்தூய்மையால் வெல்வோம்.

***மாற்றம் ஒன்றே மாறாதது மாற்றத்தின் வழி செல்ல கற்போம்.***

ச.சஜீபன்
உளவியல் துறை
யாழ்பாண பல்கலைக்கழகம்

-நயினை இனியா-

# பெண்ணினமே எழுந்துவா

அடிமையாக்க நினைப்பவர்க்கு அஞ்சி
அடுப்பங்கரை மட்டும் காணும்
பெண்ணினம் அல்ல நாங்கள்

பெண் என்றால் வேடிக்கை பொருள் என்று
நினைத்தாயோ
பார்த்து இரசிப்பதற்கும்
எள்ளி நகையாடுவதற்கும்

தாயாக உருவாகி உன் பசி தனை போக்கி
அழுகை அது ஓங்கி ஒலித்திடாமல்
காத்திட்டது தாய்ப்பால் தானே
உன் காமத்துக்காக
அப் பாலை விலை பேசாதே

தன் உயிரை பணயமாக்கி
உனக்குயிர் தந்தவள்
பெண்ணால் அல்லவா
தெய்வத்தை ஏன்
தெருவில் விற்கறாய்

ஆசைக்கு ஒரு மனைவி
ஆறுதலாய் குழந்தைகள்
அன்பான பெற்றோர்கள்
யாவரும் இருந்திட
மாற்று பெண்ணிடம் வம்பிழுப்பு
உடலழகை பார்ப்பதும்
உறுப்புரிமை கேட்பதும்
கடத்தி கற்பழிப்பதும்
கொடூரரே நீரும்
எம் இனம் தானா
மானிடனாய் தலை குனிய
வைக்கின்றது

ஆதியில் மார்பக வரி
இடையில் மார்பறுப்பு
இன்று தாய் பாலுக்கே அங்கலாய்ப்பு
என்று மாறும் இவ் நினைப்பு

வெறிப்பிடித்து திரியும்
பாதகரே
வேசி அல்ல கோதை யாவரும்
எல்லை மீறினால் சிதைக்கப்படும்
உந்தன் ஆணுறுப்பு

புதுமை பெண்கள் நாங்கள்
ஒதுங்கி போக மாட்டோம்
ஓரங்கட்டிட வன்முறையை
புறப்படுகின்றோம் இன்றே

# யாருக்கு தேசவழமை ?

அ.திருமருகன்
மாணவன்
இலங்கை சட்டக்கல்லூரி

கடந்த சட்டத்தின் சாரலில் தேசவழமைச் சட்டதிற்கு அறிமுகம் என்ற கருத்தமைவில் தேசவழமை என்றால் என்ன ? அந்த வழக்காறுகளின் உருவாக்கம் அதன் கடத்துகை, காலணித்துவ காலத்தில் ஆவணப்படுத்தப்பட்ட கோவையாக எப்படி தேசவழமை மாற்றம் பெற்றது பற்றி ஆராய்ந்து இருந்தோம். அத்துடன் தேசவழமையின் பண்புகள் அதனுடைய இன்றைய இலங்கையின் ஆட்சி எல்லைகள் சம்பந்தமாகவும் தற்கால தேசவழமை தொடர்பான சட்ட ஏற்பாடுகள் பற்றி அலசி இருந்தோம்.

இன்று அந்த தேசவழமை யாருக்கு எல்லாம் ஏற்புடையதாக அமையும் ? என்ற கருத்தமைவில் அதாவது சுருக்கமாக சொன்னால் யாருக்கு தான் தேசவழமை சட்டம் என்பதை அறியும் முயற்சியாக இந்த தேடல் அமையும்!

தேசவழமை யாருக்கு என்று நோக்கின் 'யாழ்ப்பாண மாகாணத்தின் மலபார் நிரந்தரவாசிகளுக்குரிய ' சட்டமாகும் என்று தேசவழமை சட்டம் கூறுகிறது. அன்று யாழ்ப்பாண மாகாணம் என்பதால் கட்டமைக்கப்பட்ட தேசப் பரப்பானது இன்றைய இலங்கையின் வடமாகாணம் ஆகும். அதாவது இலங்கையின் வடக்கு மாகாணத்தின் நிரந்தர வாசிகளான இலங்கை தமிழ் மக்களுக்கு உரிய சட்டமாகும்.

இந்த தேசவழமை இரண்டு பண்புகளை கொண்ட சட்டமாகும். அவையாவன
1~ ஆள்சார் சட்டம்
2~ இடம்சார் சட்டம்




'ஆள்சார் சட்டம்' என்பதன் பொருள் அந்த ஆள்சார் சட்டமானது அந்த ஆட்களை பின் தொடர்ந்து செல்லக்கூடியது ஆகும். ஆகவே வடக்கு மாகாண தமிழர்கள் இலங்கையில் எந்த இடம் சென்றாலும் அவர்களை பின்தொடர்ந்தது செல்லுகின்றதாக இந்த தேசவழமை சட்டம் அமைகிறது.
இலங்கைக்கு உள்ளே தொடரும் சரி. ஆனால் இலங்கைக்கு வெளியே எப்படி ? என்ற கேள்வி உங்களுக்கு எழும். காரணம் இன்றைய நிலையில் பல லட்சம் வடக்கு மாகாண தமிழர்கள் இலங்கையின் வெளியிலே தான வாழ்ந்து வருகின்றனர். ஆனாலும் வடக்கு மாகாணத்துடனான ஒரு தொடர்பை அவர்கள் இன்னமும் பேணிய வண்ணமே உள்ளனர்.
அப்போது அவர்களுக்கு எப்படி என்று பார்த்தால் இலங்கைக்கு வெளியே இத்தகைய தேசவழமை வழக்காற்று சட்டத்தை எண்பிப்பதன் மூலம் அவர்களுக்கு ஏற்பாடு உடையதாக காட்ட முடியும்!

உதாரணமாக திருமணம் ஒன்றை எடுத்தால் இலங்கையின் திருமண பதிவு சட்டத்தின் கீழ் திருமணம் ஒன்று கட்டாயம் பதிவு செய்யப்பட வேண்டும் என்கின்ற நியதி இங்கே கிடையாது. இலங்கைக்கு வெளியே இந்த பதிவு செய்யப்படாத வழக்காற்று திருமணங்களை ( Customary Marriage ) எண்பிக்க தேவைப்படுகின்ற இடத்தில் தேசவழமையால் ஆளப்படும் நபர்களும் அவ்வாறு செய்து கொள்ள முடியும்.

தேசவழமையின் சட்ட ஏற்பாடுகளின் படி வடக்கு மாகாணத்தின் நிரந்தர வாசிகளான தமிழர்கள் இலங்கையின் எப் பாகத்தில் வசித்து வந்தாலும் தேசவழமையால் ஆளப்படுவார்கள். உதாரணமாக வடக்கு மாகாணத்தின் நிரந்தர வாசியான இலங்கை தமிழர் ஒருவர் மாத்தறை மாவட்டத்தில் வசித்து வருகிறார் என்றால் அவருக்கு தேசவழமை சட்டமே ஏற்பாடு உடையதாக அமையும்.

ஆனால் யாழ்ப்பாண திருமண உரிமைகள் மற்றும் வழியுரிமைகள் கட்டளை சட்டத்தின் படி 'பெண்களுக்கு தேசவழமையின் ஏற்புடமையானது திருமணம் மூலம் மாறுபடும்'.

அதாவது,

தேசவழமையால் ஆளப்படுகின்ற வடக்கு மாகாணத்தின் நிரந்தரவாசியான தமிழ் பெண் ஒருவர் வடக்கு மாகாணத்திற்கு வெளியே உள்ள ஆண் ஒருவரை திருமணம் செய்வாராயின் அந்த திருமணம் வலிதாக உள்ள காலப்பகுதியில் அந்தப் பெண் தேசவழமையால் ஆளப்படமாட்டர்.

மாறாக,

தேசவழமையால் ஆளப்படாத பெண் ஒருவர் தேசவழமையின் ஆளுகைக்கு உட்பட்ட ஆண் ஒருவரை திருமணம் செய்வாராயின் அந்த திருமணம் வலிதாக உள்ள காலப்பகுதியில் அந்தப் பெண் தேசவழமையால் ஆளப்படுவார்.

'திருமணம் வலிதாக உள்ள காலம்' என்பதால் கூற வருவது அந்த திருமணம் செயற்பாட்டில் இருக்கும் காலப்பகுதி ஆகும். உதாரணமாக விவாகரத்து போன்ற மணமுறிவு ஒன்று அங்கே ஏற்படும் சந்தர்ப்பங்களில் அந்த பெண்ணிற்கு மீண்டும் முன்னைய சட்ட ஏற்பாடுகளே காணப்படும்.

ஆள்சார் சட்டம் என்பதன் விளக்கம் அறிந்தோம். இப்போது தேசவழமையின் அடுத்த பண்பான 'இடம்சார் சட்டம்' பற்றி நோக்குமிடத்து,

தேசவழமையானது வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள சகல காணிகளுக்கும் ஏற்புடைய சட்டமாகும். இங்கு கவனிக்க வேண்டிய மிக முக்கியமான விடயம் எது என்றால் யார் இந்த காணிகளுக்கு சொந்தக்காரர் என்பது இங்கே சம்பந்தப்பட்டது அல்ல.

உதாரணமாக ஒரு நிகழ்வை எடுத்து பார்த்தோமேயானால், தேசவழமையால் ஆளப்படாத தமிழர் ஒருவர் அல்லது இலங்கை சோனகர் ஒருவர் அல்லது சிங்களவர் ஒருவர் வடக்கு மாகாணத்தில் காணி ஒன்றை வாங்குமிடத்து அந்த காணி தொடர்பான சட்டமாக தேசவழமையே காணப்படும்.

சற்றே ஆழமாக நோக்கின் கண்டிய சட்டத்தினால் ஆளப்படும் கண்டியச் சிங்களவர் ஒருவர் வடக்கு மாகாணத்தில் ஒரு காணி ஒன்றை வாங்குமிடத்து அந்த காணி தொடர்பான சட்டமாக தேசவழமையே காணப்படும் அதே வேளை அந்த காணியின் அல்லது அந்த ஆதனத்தின் வழியுரிமை கண்டியச் சட்டத்தினாலே தீர்மானிக்கப்படும் காரணம் அந்த கண்டிய சிங்களவருக்கு ஆள்சார் சட்டமானது கண்டிய சட்டமாகும்.

நிற்க..!

நாம் கடந்த சட்டத்தின் சாரலில் தேசவழமையின் மூன்று சட்ட ஏற்பாடுகளில் 'தேசவழமை முன்வாங்கு உரிமைக் கட்டளைச் சட்டம்' என்ற ஒரு சட்ட ஏற்பாட்டினை பார்த்தோம் அல்லவா இப்போது கீழ் அந்தக் கண்டிய சிங்களவருடைய காணியின் வரம்பெல்லை தேசவழமை முன்வாங்கு உரிமை கட்டளைச் சட்டத்தின் கீழ் வருமாக இருந்தால் அக்காணி தொடர்பில் தேசவழமையின் முன்வாங்கு உரிமைக் கட்டளைச் சட்டமே ஏற்புடையதாக அமையும்.

தேசவழமை முன்வாங்கு உரிமைக் கட்டளைச் சட்டம் ( Pre- emption under the Thesawalamai ) பற்றி விரிவாவும் ஆழமாகவும் அடுத்த தூமியின் சட்டத்தின் சாரல்களில் பார்க்கலாம்.

இந்த தேசவழமையின் ஏற்புடமை அதாவது யாருக்கு தேசவழமை என்பதில் வேறுபட்ட பார்வை இருந்த போதும் நீதிமன்றங்களினால் வழங்கப்பட்ட தீர்ப்புக்களே எமக்கான தரவுகளாகவும் வழிகாட்டியாகவும் அமைகிறது. இந்த தேசவழமையானது வடக்கு மாகாணத்தின் நிரந்தர வாசிகளான இலங்கை தமிழர்களின் சட்டம் என்பது பல்வேறு பட்ட நீதிமன்ற தீர்ப்புக்களின் படி வியாக்கியானம் செய்யப்பட்டுள்ளது.

உதாரணமாக சில வழக்குகளை எடுத்து நோக்கினால்

ஸ்பென்சர் எதிர் இராஜரட்ணம் வழக்கில் தேசவழமை ஒரு மதத்தை சேர்ந்த ஆட்களுக்கு உரிய சட்டம் அல்ல அத்துடன் இந்த சட்டம் அனைத்து தமிழர்களுக்கும் உரியது அல்ல. இது வடக்கு மாகாண நிரந்தர வாசிகளாக உள்ள இலங்கை தமிழர்களுக்கு உரிய சட்டமாகும் என நீதிமன்றம் எடுத்து காட்டியது.

சவுந்தரநாயகம் எதிர் சவுந்தரநாயகம் வழக்கில் ஒருவர் யாழ்ப்பாணத்தில் பிறந்து உள்ளார். ஆனால் அவரது தந்தை ஒரு கொழும்பு செட்டியாக இருந்த போதும் வசிப்பிடத்தை யாழ்ப்பாணத்திற்கு மாற்றி இருந்தார். நீதிமன்றம் அவர் தேசவழமையால் ஆளப்பட மாட்டார் என்று தீர்ப்பளித்தது.

King எதிர் பெருமாள் என்ற வழக்கில் இந்தியாவில் பிறந்த ஒரு தமிழர் இலங்கையின் மத்திய மாகாணத்தில் வசித்து வந்தார். அவர் தேசவழமையால் ஆளப்படமாட்டார் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஆகவே

'ஒருவர் தனக்கு தேசவழமை ஏற்புடையாதவதற்கு தான் வடக்கு மாகாணத்தின் நிரந்தர வாசியான இலங்கை தமிழர் என்பதை நிரூபிக்க வேண்டும்'.

**சாரல் தூறும்.....................!!!!!!!!**




ச.லிபிசா
தரம் 11
வ.ஓமந்தை மத்திய கல்லூரி




சசீந்திரராஜன் அஸ்வினி
Cm2
பிரான்ஸ்



S.மௌவீசன்
தரம் 03
வ.மதீனா வித்தியாலயம்




பாஸ்கரன் புவிதா
வயது 14
சுவிஸர்லாந்து






My Grandmother

My grandmother's name is Panchavarnam.
She is 63 years old and stays with my grandfather at their home.
She lives in Srilanka. However, she would talk to us on the phone everyday.
During vacation I stay with them.
I am first grandson of her.
Everyday morning I go to temple with my grandmother.
She cooks very tasty, especially she prepares the rice cooked in previous day (palaya soru) with potato, dal curry and omelette. It is very tasteful.
She is watching tamil drama and singer programmes in her free times.
She helps me when I fight with my mom. Sometimes I too help her.
She is my best friend. I love her so much.

சசீந்திரராஜன் விஸ்ணுஜன்
6 eme
பிரான்ஸ்

# சித்த மருத்துவம் ஒரு மகத்துவம்

N.ஹரிசாந்.

# தாம்பூலம் தரித்தல்

வெற்றிலை போடுதலே தாம்பூலம் தரித்தல் என அழைக்கப்படும். வெற்றிலை போடுவது தவறான பழக்கமா?
இதனால் புற்றுநோய் உண்டாகுமா?

நான் அறிய நிறையபேரிடம் வெற்றிலை போடுவது வழக்கமாக உள்ளது. அவர்கள் முறையாக போடுகிறார்களா என்றால் அது கேள்விக்குறியே..? வெற்றிலை போடுவதற்கும் முறை உள்ளதா???

ஆம் வெற்றிலை போடுவதற்கும் முறையுண்டு....

வழக்கமாக வெற்றிலை போடுபவர்கள் முதலில் பாக்கை வாயில் போடுவார்கள் இது முற்றிலும் தவறான விடயமாகும் காரணம் பாக்கு துவர்ப்பு(Astringent) சுவை உடையது இதனால் எமது வாய்க்குள் உள்ள உமிழ்நீர் சுரப்பிகளின்(salivary glands) சுரப்பு(salaiva) குறைகின்றது. இதனால் பாக்கை மென்று விழுங்கும் போது நெஞ்சு அடைப்பது போன்ற உணர்வு ஏற்படும். வாயில் முதலில் வெற்றிலையை போட வேண்டும் வெற்றிலையின் நுனி,காம்பு,நரம்பு என்பவற்றை நீக்கி வாயில் போடவேண்டும். பின்னர் பாக்கு மற்றும் இன்னுமொரு வெற்றிலையை காம்பு,நரம்பு,நுனி நீக்கி இலையின் பின்னால் சுண்ணாம்பு தடவி வாயிலிட்டு மெல்ல வேண்டும்.

இவ்வாறு மெல்லும் போது முதலில் ஊறும் நீர் உகந்ததன்று. இரண்டாவதாக ஊறும் நீர் பைத்தியமாக்கும். மூன்றாம் நீர் அமிர்தமாகும். நான்காம் நீர் அதியினிப்பாய் இருக்கும். ஐந்தாம், ஆறாம் நீர் பயன் அற்றது இது அக்கினி மந்தம்(poor Digestion), பாண்டு நோய்(Anaemia) என்பவற்றை உண்டாக்கும். எனவே இவற்றை துப்பி வாயை கழுவிவிட வேண்டும்.



வெற்றிலை போடுவதால் அறிவு விழிக்கும். உடலுக்கு நலம் உண்டாகும்.

வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்புடன் கிராம்பு, ஏலம், வால்மிளகு, சாதிக்காய், சுக்கு, காசுக்கட்டி, சாதிபத்திரி என்பவற்றில் சில சேர்த்தும் போடலாம்.

மேற்கூறியவற்றில் புகையிலை பற்றி குறிப்பிடவில்லையே? ஆம் புகையிலை இடையில் போதைக்காக சேர்க்கப்பட்டது. விதிகள் மாற்றப்படும் போதே வியாதிகளும் தோற்றம் பெறுகின்றன..



சுண்ணாம்பினால் எந்தப்பாதிப்பும் இல்லையா?? அளவு மீறும் போதே தீமை. அப்படியானால் நன்மை என்ன? சுண்ணாம்பில் இருந்து நேரடியாகவே கல்சிய சத்து கிடைக்கின்றது. இதனாலேயே வெற்றிலை போடும் பாட்டி தாத்தாக்கள் இன்றளவும் எந்த மூட்டு மற்றும் எலும்பு பிரச்சினைகள் இல்லாமல் இருக்கின்றார்கள். வெள்ளை சுண்ணாம்பில் நிறம் சேர்ப்பதும் தவறான விடயமே.

வெற்றிலை, பாக்கு இவை எவ்வாறு தேர்ந்தெடுக்க வேண்டும் எந்த நேரத்தில் எதை அதிகமாக சேர்க்க வேண்டும். யாரெல்லாம் வெற்றிலை போடக்கூடாது என்பன பற்றியும் எமது முன்னோர்கள் தெளிவாக கூறியுள்ளனர் என்பது சிறப்புக்குரியது.

***வெற்றிலை வெறும் வெத்து இலை இல்லை.***

# கொரோனா கால கல்விநிலை

வாசுகி சிறிதரன்
உளவியல் துறை
யாழ். பல்கலைக்கழகம்

இன்று உலகுக்கே ஆட்டம் காட்டிக் கொண்டிருக்கின்ற உயிர்கொல்லி தொற்று நோயாக கொரோனா பரவிக் கொண்டிருக்கின்றது. நமக்கு எப்போது என்ன நடக்கும்? இன்று இருக்கும் நாம் நாளை இருப்போமோ என்ற அச்சநிலையிலே நமது வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கின்ற காலமிது. கொரோனா என்ற பேரை கேட்டலே மக்கள் பதகளித்து தெறித்தோடி ஒழிக்கின்ற வாழ்க்கை நிலையிலே பயணிக்கின்றனர். "வீட்டிலிரு, தனித்திரு" என்று கூறிவிட்டாலும் கூட கொரோனாவின் தாக்கம் அதிகரித்து கொண்டே வருகின்றது. உலகம் சுருங்கி நாடுகள் நடுநடுங்கி, ஊர்கள் அடங்கி, உளங்கள் முடங்கி தினந்தோரும் அவதிப்படும் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டு விட்டோம்.

எப்போது கொரோனா எம்மை விட்டு போகும்? என்ற வினாவுக்கான பதிலை எதிர்பார்த்த வண்ணம் மக்கள் ஊடகங்களில் உலாவருகின்றனர். ஆனாலும் நாள்தோரும் ஊடகங்களின் வாயிலாக நாம் கேட்ட செய்திகள் கொரோனா தொற்றுகளின் எண்ணிக்கை அதிகமாம், பல லட்சகணக்கானோர் கொரோனாவால் பலி போன்ற தகவல்களையே அறிகின்றோம்.

இதனால் இன்றைய உலகமானது உடல், உளரீதியாக பலதரப்பட்ட இன்னல்கள், துன்பங்கள் வன்முறை களுக்கு முகங்கொடுத்து கொண்டிருப்பதை, நம்மால் காணமுடிகின்றது. இத்தகைய நிலையில் உலக நாடுகள் அனைத்தும் முடங்கப்பட்ட நிலையில் இருக்கின்றது. இவற்றில் எமது கல்வி துறையும் கேள்விக்குறியாகியுள்ளது. கொரோனா பரவும் விகிதம் அதிகரித்தவுடனே நமக்கெல்லாம் அரசு விடுமுறையை விட்டுவிட்டனர் இதனால் அதீத மகிழ்ச்சியில் எமது சொந்த இடங்களை நோக்கி புறப்பட்டோம். விடுமுறை என்றாலே மாணவர்களுக்கு மகிழ்ச்சி தானே. பாடசாலை போக தேவையில்லை, பாடங்கள் படிக்க தேவையில்லை, வீட்டு வேலைகள் செய்ய தேவையில்லை என்ற எண்ணங்கள் எமது மகிழ்ச்சிக்கு காரணமாகி விடுகின்றன.

ஆனால் இந்த கொரோனா காலத்தில் அரசு எமது பாதுகாப்பு கருதியே பாடசாலை, பல்கலைக்கழகங்க ளுக்கு காலவரையறையற்ற விடுமுறையை அறிவித்தது நாமும் வீட்டிலிருந்து காலையில் நேரஞ்செல்ல எழும்பி, எழும்பியதும் தொலைக்காட்சியை போட்டு காலை முதல் இரவு வரை ஒன்றன் பின் ஒன்றாக ஒலிபரப்பாகும் படங்கள், நிகழ்வுகளை பார்த்து கொண்டே அன்றைய நாளைய கழிக்கின்றோம். இல்லையேல் அயல் நண்பர்களுடன் சேர்ந்து விளையாடுவது இதனையே வழமையாக்கி கொண்டோம் இந்த கொரோனா காலத்தை மாணவர்கள் சரியான முறையில் பயன்படுத்த முடியவில்லை புத்தகம் எடுத்து படிப்பதற்கே மனமற்ற வர்களாக சமூக வலைத்தளங்களில் எமது பொழுதை போக்கி கொண்டிருக்கின்றோம்.

இத்தனை நாட்களும் படிப்பை மறந்திருந்த எமக்கு அரசாங்கம் இணையவழி கல்வி செயற்பாட்டை மாணவரது நன்மை கருதி ஏற்படுத்த தொடங்கியது. இருப்பினும், இந்த கல்வி நடவடிக்கை அனைத்து மாணவர்களிலுமே சாத்தியப்படவில்லை என்றே கூற வேண்டும். ஆசிரியர் போனில் வகுப்பு நடாத்துவார். அந்த நேரத்தில் எமது அலைப்பேசியில் பணமிருக்காது. பணமிருந்தாலும் சரியான நெட்வேரக் வசதியிருக்காது. இதனால் எமது கல்வி நடவடிக்கையை தொடர்ந்து செல்லமுடியாத இக்கட்டான சூழ்நிலையில் இருக்கின்றோம் அத்தோடு எல்லா



மாணவரிடத்தும் Smart Phone வசதியும் காணப்படுவதில்லை. குறிப்பாக மாணவர்களை பொறுத்தமட்டில் இந்த இணையவழி கல்வி செயற்பாட்டின் போது அவர்கள் தமது வேறு வேலைகளை செய்ய கூடும் படிப்பை கவனத்தில் எடுக்க முடியாது. சின்னஞ்சிறார்களுக்கும் ஆசிரியர்கள் பரீட்சை Papersஇனை Whats app groupஇல் போட்டு விடுவார்கள். ஆனால் பெரும்பாலான மாணவர்கள் அதனை செய்வதாக தெரியவில்லை.

எனவே கல்வி நிலையை பொறுத்தமட்டில் இந்த கொரோனா காலத்தில் தரம் 05 புலமைப்பரீட்சை மற்றும் கா.பொ.த உயர்தர பரீட்சையை எதிர்நோக்கும் மாணவர்களது நிலையே கேள்விகுறியாகியுள்ளது. பாடசாலை, தனியார் வகுப்புக்கள் முடக்கப்பட்ட நிலையில் இவர்களது கல்வியை தொடவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே உள்ளன. பாட ஆசிரியர்கள் "zoom" இணையத்தள வகுப்புக்களை நடத்திய போதிலும் மாணவர்களுக்கு அது பற்றி விளக்கங்கள் முழுமையாக கிடைக்க பெறுவதாக தெரியவில்லை. எனவே அவர்கள் தமது பரீட்சை தொடர்பாக உளரீதியாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்தோடு மாணவர்களுக்கு ஆசிரியர்கள் போனில் போடும் பயிற்சிகளை செய்ய பெற்றோர் வீட்டில் வற்புறுத்துவதாலும், அதிகளவு கண்டிப்புடன் நடந்து கொள்வதாலும் மாணவர்கள் உடல் உளரீதியாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளமையை காணக்கூடியதாக உள்ளது.

எனவே இந்த கொரோனா பரவும் அச்சகாலத்தில் மாணவர்களது கல்வி நிலையை எவ்வாறு உயர்த்தலாம்? அதன் பால் அவர்களது ஆர்வத்தை எவ்வாறு ஈர்ப்பது? தொடர்பாக பெற்றோர்களும் ஆசிரியர்களும் கவனமெடுப்பது மிகவும் முக்கியமாகும். பாடசாலை கல்வி ஸ்தம்பித்து போயுள்ள இந்த காலகட்டத்தில் , வெளிநாடுகளில் Online கல்வி சாத்தியப்படுகின்றது. ஆனால் இலங்கையை பொருத்தமட்டில் Online கல்வி சாத்தியப்படுகின்றதா? என்றால் கேள்விக்குறியே ஆனாலும் கொரொனா காலத்தில் எம்மால் மிகச்சிறந்த முறையில் செயற்பட முடியும்.

அதாவது இதுவரை நாம் படித்த பாட அலகுகளை மீண்டும் படிப்பதற்கும், விடுபட்ட பாட அலகுகளை மீட்டலுக்குமான சந்தர்ப்பமாக இதனை பயன்படுத்தி கொள்ளலாம். அத்தோடு வீட்டில் இருக்கின்ற படிக்கின்ற மாணவர்கள் தமக்கு தேவையான எதிர்கால தொழிற் முயற்சிக்கான திறன்களை வளர்த்து கொள்வதுடன், மொழி, மற்றும் வாழ்க்கை திறன்களை வளர்த்து கொள்ள இந்த நேரத்தை பயன்படுத்தலாம்.

கொரோனா அபாயம் நீங்கிய பின்பு அவர்கள் கல்வி கூடத்துக்கு செல்லும் போது அவர்களின் கல்விசார் செயற்பாட்டிலும் நடத்தையிலும் நல்ல மாற்றங்கள் ஏற்படும். குறிப்பாக பெண் பிள்ளைகள் வீட்டில் இருந்தால் பெற்றோர்(தாய்மார்) அவர்களுக்கு அடிப்படை தேவை களை நிறைவேற்றவும் வீட்டு வேலைகளை செய்வது தொடர்பாகவும் சொல்லி கொடுக்கலாம். அத்தோடு ஆசிரியர்கள் தாம் மாணவர்களுக்கு போடும் பாடத்திட்ட செயற்பாடுகளில் எவ்வாறான Notes போடலாம் எவ்வாறு இலகுவாக கற்பிக்கலாம் என திட்டமிடலாம்.

மேலும் கொரோனா காலமானது எமக்கு தூங்குவதற்குரிய நேரமாக இல்லாமல் கற்று கொள்வதற்கான தளங்களை ஏற்படுத்தும் காலமாக மாற்றியமைக்க வேண்டும். அதாவது நாம் இதுவரை பாடசுமைகளின் மத்தியில் பலதரப்பட்ட Diploma கற்கை நெறிகளை தொடரமுடியாமல் இருக்கும். மாணவர்கள் அதனை செய்வதற்கான வாய்பாக இது இருக்கும். அத்தோடு எல்லோருக்குமே இது விடுமுறை காலமாக இருப்பதால் பெற்றோர்கள் பிள்ளைகளுக்காக நேரம் ஒதுக்கி அவர்களின் திறமைகளை வளர்த்தல், குழந்தையானது இச்சந்தர்ப்பத்தில் மன அழுத்தம், பதகளிப்பு நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதனால் பெற்றோரார்களின் ஈடுபாடு கூட இருக்க வேண்டும் என விரும்புவார்கள். அதனை பெற்றோர் புரிந்து கொண்டு செயற்படல், அத்துடன் கொரோனா பற்றிய தேவையான விடயங்களை மட்டுமே பிள்ளைக்கு சொல்லி கொடுத்தல் வேண்டும். அதாவது இது எப்படி வந்தது? எவ்வாறு தவிர்க்கலாம்? தனிமனித சுகாதாரத்தை எப்படி பேணல் (கை கழுவுதல், முக கவசம் அணிதல், வாய்சுத்தம் பேணல்) வாழ்க்கைக்கு தேவையான வழிகாட்டல்களை வழங்குதல் பெற்றோர் தைரியமாக தன்னம்பிக்கையுடன் ஆரோக்கியமாக இருந்தால் தான் அதனை Roll modelஆக பிள்ளைகள் எடுத்து கொள்வர். எனவே பெற்றோர்களது நடத்தைகள் ஆரோக்கியமமாக அமைய வேண்டும். இவ்வாறாக இக்காலம் பிள்ளைகள் அனைத்தையும் கற்கும் காலமாக மாற்றியமைத்தல் சிறந்ததாகும்.






| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | 5 | |
| 6 | | | 7 | | | | |
| 8 | | 9 | 10 | | | 11 | 12 |
| | | 13 | | 14 | 15 | | |
| 16 | 17 | | | 18 | | 19 | |
| 20 | | | 21 | | | | |
| | | | 22 | | | | |
| 23 | | | | | | | |

## குறுக்கெழுத்துப்போட்டி விதிமுறைகள்

1. ஒவ்வொரு இதழிலும் வருகின்ற குறுக்கெழுத்துப்போட்டிகளுக்கான விடைகளை முடிவுத்திகதிக்கு முன் எமது மின்னஞ்சல் முகவரி ஊடாக அனுப்பி வையுங்கள். முடிவுத்திகதியின் பின்னர் கிடைக்கும் மின்னஞ்சல்கள் நிராகரிக்கப்படும்.

2. விடைகளை கடதாசியில் உரிய இலக்கங்களோடு எழுதியோ அல்லது குறித்த மின்னிதழ் பக்கத்தை அச்சுப் பிரதி (print) எடுத்தோ அனுப்பலாம்.

3. உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றையும் உங்கள் விடைகளோடு எமக்கு அனுப்ப வேண்டியது கட்டாயமானது. விபரங்கள் உரிய முறையில் இல்லாத விடைகள் நிராகரிக்கப்படும்.

4. தரம் 11 ற்கு உட்பட்ட பாடசாலையில் கற்கும் மாணவர்கள் மட்டும் பரிசுகளுக்கு உரித்துடையவர்களாவர்.

5. மிகச்சரியான விடைகளை பலர் அனுப்பி இருந்தால் குலுக்கல் முறையில் வெற்றியாளர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு அவருக்கான பரிசில் அனுப்பி வைக்கப்படும்.

## இடமிருந்து வலம்

1~ கட்டுள்ள உடல்
6~ மரம் (திரும்பி)
7~ போற்றிப் புகழ்ந்து பாடப்படுவது
8~ இது கைவிடேல் என்பது ஔவையின் அறிவுரையாகும்.(குழம்பி)
11~ இதனை தீ சுடினும் சிவசக்தியை பாடும்நல் அகம் வேண்டுகிறார் பாரதியார்.(திரும்பி)
13~ இதனை உண்பதற்கு கூலி வேண்டமா என்று கேட்கிறது முதுமொழி.
16 ~ அரசியல் பிழைத்தார்க்கு இது கூற்றாகும் என்பது சிலப்பதிகாரம் கூறும் சாரமாகும்.(குழம்பி)
18~ மரியாதை என்றும் சொல்லலாம்.(குழம்பி)
20~ பஞ்சமா பாதகங்களில் ஒன்று.(திரும்பி)
21~ நிலவுக்கு இன்னொரு பெயர்(குழம்பி)
22~ விளக்கேற்ற தேவையானது
23~ தூமியின் இதழ் மூன்றின் முன்பக்க அட்டைப்படத்தை அலங்கரித்த சைவசமய குரவரால் பாடப்பட்ட பக்தி இலக்கியம்.

## மேலிருந்து கீழ்

1~ உலகப் பொது மறை
2~ வண்டி சென்ற பாதையை கண்டுபிடிக்க உதவுவது.(குழம்பி)
3~ இதன் சுதந்திரம் பதின்மூன்றாம் சரத்து (குழம்பி)
4~ வானவெளியில் சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையே ஏற்பட்ட தூரத்தின் பெயர் பஞ்சாங்கத்தில் இவ்வாறு அழைக்கப்படும்.
5~ இந்து மதத்தின் ஒரு பிரிவு.(தலைகீழ்)
9~ அனுமானம் என்றும் சொல்லலாம்.
12~ புதல்வனைக் குறிக்கும்.
14~ அக்கறை என்றும் சொல்லலாம்.(தலைகீழ்)
15~ குதிரையினைக் குறிக்கும் சொல்.(குழம்பி)
17~ தகுதி என்றும் சொல்லலாம்.(குழம்பி)
19~ நாளினைக் குறிக்கும்.(குழம்பி)
21~ வீதிகள் இணையும் இடம்(குழம்பி)

**அனுப்ப வேண்டிய.......**
மின்னஞ்சல் முகவரி :~ thumi2016@gmail.com
இறுதித்திகதி :~ 12.07.2020

சுமாரான ஒரு உலகக்கோப்பை தொடர். அதிலும் இறுதிப் போட்டியில் தோல்வி என இளையவர் யுவராஜ் உலகக்கோப்பை தொடரை நிறைவு செய்து இருந்தார். அணிக்குள் இளைய வீரர்களாக இருந்த யுவராஜ் சிங், முகமது கைப், சகீர் கான், நெஹ்ரா ஆகியோர் அடுத்த தலைமுறை வீரர்களாக அடையாளம் காணப்பட்ட தொடராக இந்த 2003 உலகக்கோப்பை அமைந்தது என்றாலும் மறுப்பதற்கில்லை. அதிலும் இந்திய அணியின் பிரகாசமான எதிர்காலமாக யுவராஜ் சிங் பார்க்கப்பட்டார். அதிரடியான இளந்துடிப்பான வீரராக தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட யுவராஜ் சிங் அபாயகரமான நம்பிக்கை தரக்கூடிய வீரராக தன்னை நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தார். அதாவது consistency என்று சொல்லப்படுகின்ற தொடர்ச்சியாக ஓட்டங்களை குவிக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தார்.

## யுவராஜ் சிங் எனும் யுக வீரன்



அக்னி

உலகக்கோப்பை தொடர் முடிவடைந்ததும் பங்களாதேஷ் சுற்றுப்பயணம் மேற்கொண்டது இந்தியா. அந்த தொடரின் தனது கன்னிச்சதத்தை பதிவு செய்து கொண்டார் யுவராஜ் சிங். டாக்காவில் நடைபெற்ற அந்தப் போட்டியில் 85 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 102 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார் யுவராஜ். இதனை தொடர்ந்து 2003 மே மாதம் இங்கிலாந்தில் இருந்து ஒரு கௌரவம் யுவராஜ் சிங் இன் கதவை தட்டியது. இந்திய அணிக்காக கூட தனது டெஸ்ட் போட்டிகளிற்கான அறிமுகத்தை தொடங்காத யுவராஜ் சிங் ஐ Yorkshire கழகம் தமது அணியில் இணைத்துக் கொண்டது. சச்சின் டெண்டுல்கரின் பின்னர் இங்கிலாந்தின் கவுண்டி போட்டிகளில் ஆடும் இரண்டாவது இந்திய வீரரானார் யுவராஜ் சிங். அதே வருடம் அக்டோபரில் நியூசிலாந்து அணிக்கு எதிராக அவரது சொந்த மைதானமாக கருதப்படும் பஞ்சாப் மாநிலத்தின் மொகாலி மைதானத்தில் இடம்பெற்ற டெஸ்ட் போட்டியில் இந்திய அணியில் வாய்ப்பு பெற்றார் யுவராஜ். முதல் போட்டியில் 20, 5 ஓட்டங்களை மாத்திரமே பெற முடிந்தது. மீண்டும் அந்த வருட இறுதியில் இந்தியாவில் நடைபெற்ற ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து அணிகள் மோதிய முத்தரப்பு தொடரில் 8 ஆட்டங்களில் வெறுமனே 113 ஓட்டுக்களே குவித்தார். அணியில் மீண்டும் வாய்ப்பு கிடைக்குமா என்ற சந்தேகம். ஆனாலும் கங்குலி அவர் மீது கொண்ட நம்பிக்கை அடுத்து ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற முத்தரப்பு தொடரில் இந்திய அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார் யுவராஜ். அந்த நம்பிக்கையை யுவராஜ் காப்பாற்றினார் என்றே சொல்ல வேண்டும்.





8 ஆட்டங்களில் 314 ஓட்டங்களை குவித்ததோடு சிட்னி மைதானத்தில் நடைபெற்ற ஆஸ்திரேலியா அணிக்கு எதிரான போட்டியில் 122 பந்துகளில் 139 ஓட்டங்களை குவித்து தன்னை நிரூபித்தார் யுவராஜ்.

ஆனாலும் அதனை தொடர்ந்து நடைபெற்ற பாகிஸ்தான் தொடரில் ஒரு நாள் தொடரில் ஏமாற்றினாலும் டெஸ்ட் தொடரில் தனது கன்னிச்சதத்தை பதிவு செய்தார் யுவராஜ். 2004 நடுப்பகுதியில் இருந்து 2005 நடுப்பகுதி வரையான காலம் யுவராஜ் சிங் இற்கு மிகவும் சோதனையான காலமாக அமைந்தது. இந்த இடைப்பட்ட கால இடைவெளியில் வெறுமனே இரண்டு அரைச்சதங்களையே பெற்று இருந்தார் யுவராஜ். இந்த இடைவெளியில் நடைபெற்ற ஆசியக்கிண்ணம், சம்பியன் கிண்ணம், Border-Gavaskar கிண்ணம் என முக்கியமான தொடர்களில் எல்லாம் சொதப்பினார். ஆனாலும் இந்திய அணியில் தொடர்ந்தும் ஆடிக்கொண்டு இருந்தார் யுவராஜ். அடுத்த அணித் தலைவராக கருதப்படும் ஒரு வீரரை அணியில் இருந்து கழற்றி விட நிர்வாகம் விரும்பவில்லை போலும்.



## யுவராஜ் சிங் இன் ஏறுமுகம்....

2005 இன் நடுப்பகுதியில் இருந்து யுவராஜ் ஏறுமுகத்துடன் முற்னேற ஆரம்பித்தார். இதற்கு முக்கிய காரணம் அதுவரை தன்னை நம்பகரமான ஆட்டக்காரராக நிலைநிறுத்த கஷ்டப்பட்டு கொண்டு இருந்த யுவராஜ் சிங், அதன் பின்னர் தன்னை ஒரு ஆபத்தான மட்டையாளனாக்க விரும்பியதே ஆகும். ஆம் எப்போதும் அதிரடியாக துடுப்பெடுத்தாட ஆசைப்படும் யுவராஜ் தான் களத்தில் இருக்கும் வரை இந்திய அணியின் ஓட்டவேகத்தை குறையாமல் பார்த்துக் கொண்டார். இதில் அவருக்கு பல சதங்கள் நஷ்டமானாலும் இந்திய அணி வெற்றிகளை பறிக்க காரணமான ஒருவராக மாறிக் கொண்டு இருந்தார் யுவராஜ்.
2005 இல் நடைபெற்ற Indian oil முத்தரப்பு தொடரில் தனது மூன்றாவது சதத்தை பதிவு செய்ததோடு அதற்காக ஆட்டநாயகன் விருதும் வென்றார். தொடர்ந்து நடைபெற்ற Videocon தொடரில் சிம்பாவே அணியுடனான போட்டி ஒன்றில் இந்திய அணி 36 ஓட்டங்களுக்கு நான்கு



இலக்குகளை இழந்து தடுமாற 120 ஓட்டங்களை குவித்து இந்திய அணியை வெற்றி பெற செய்ததோடு ஆட்டநாயகனும் ஆனார். தொடர்ந்து 2005 இறுதியில் இடம்பெற்ற தென்னாப்பிரிக்க அணிக்கு எதிரான தொடரில் தொடர் நாயகன் என ஜொலித்துக் கொண்டு இருந்த யுவராஜ் சிங் மீது ஆர் கண்பட்டதோ தெரியாது. 2006 இல் இடம்பெற்ற இலங்கை அணிக்கு எதிரான தொடரில் 7 போட்டிகளில் 113 ஓட்டங்கள், சுமாரான மேற்கிந்திய தொடர். இறுதியில் இங்கிலாந்தில் இடம்பெற்ற சம்பியன் கிண்ண பயிற்சியின் போது காயம் என தொடர் சறுக்கல்கள். காயமடைந்த யுவராஜ் சிங் இற்கு பதிலாக தினேஷ் மொங்கியா சேர்க்கப்பட்டார். இன்னும் ஒரு பேரிடியாக 2007 உலகக்கோப்பையிலும் பங்கேற்பது கடினம் என்று மருத்துவ அறிக்கையும் வந்து விழுந்தது.

ஆனாலும் அப்போது இருந்த தேர்வு குழு தலைவர் டிலிப் வெங்கட்சாகர், உலகக்கோப்பை அணியில் யுவராஜ் சிங் ஐ தேர்வு செய்திருந்தார். அதற்கு ஏற்ப உலகக்கோப்பை தொடரிற்கு முன்பாக இடம்பெற்ற இலங்கை அணிக்கு எதிரான தொடரில் இறுதிப் போட்டியில் 95 ஓட்டங்களையும் குவித்து இருந்தார் யுவராஜ் சிங். ஆனாலும் 2007 உலகக்கோப்பை யுவராஜ் சிங் இற்கு மட்டும் அல்ல ஒட்டுமொத்த இந்திய அணிக்குமே பேரிடியாக வந்து விழுந்தது. முதல் போட்டியில் பங்களாதேஷ் அணிக்கு எதிராக அதிர்ச்சித் தோல்வி, இறுதி லீக் ஆட்டத்தில் இலங்கை அணிக்கு எதிரான தோல்வி என முதல் சுற்றோடு இந்திய அணி வெளியேறியது. வீரர்களின் உருவப்படங்கள் எரிப்பு, வீடுகளின் மீது கல்வீச்சு என வீரர்கள் அனைவரும் மனதளவில் உடைந்து போய் இருந்தார்கள்.



ஆனால் அந்த மௌனம் 2007 T-20 உலகக்கோப்பைக்கான சூறாவளியாக தயாராகிக் கொண்டு இருந்ததை வீரர்கள் கூட உணர்ந்து இருக்க வாய்ப்பில்லை....

**யுவராஜ் சிங் எனும் சூறாவளி எதிரணிகளை கதற விட காத்திருந்தது..**

அடுத்த இதழ்....

ஆடிப்பிறப்பு சிறப்பு இதழ்...